தொகுதி - 10 பகுதி - 2

கார்த்திகை - 1 17—11—87

உ

சிவ சிவ

நமரங்காள்!

குலமகட்குத் தெய்வம் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையும் தாயும் — அறவோர்க்கு
அடிகளே தெய்வம் அனைவோர்க்கும் தெய்வம்
இலைமுகப் பைம்பூண் இறை .

— ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

நற்குடிப் பிறந்த கற்புடையாளுக்கு அவளுடைய கணவனே தெய்வமாவான். உறுதியாகப் பிள்ளைகட்கு அவரவரது தந்தையும் தாயும் தெய்வமாவர். அறநிலையில் நின்று தத்துவ நூல்களைக் கேட்போர்க்கு அவரது ஆசாரியனே தெய்வமாவான். உலகில் வாழும் எல்லாக் குடிமக்களுக்கும் இலைபோல் விரிந்த முகத்தை யுடைய வேலையும் பசியபொன்னணிகளையும் உடைய அரசனே தெய்வமாவான்.

ஸ்ரீ குமரகுருபரர்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் கயிலைமாமுனிவர்
ஸ்ரீ ல ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்தம்பிரான்சுவாமிகள் அவர்கள்
அருளாணையின் வண்ணம் வெளிவரும் சமய இலக்கியத் திங்களிதழ்.

சிறப்பாசிரியர்கள்

திரு. அ. ச. ஞானசம்பந்தன்
திரு. தா. ம. வெள்ளைவாரணம்

ஆசிரியர் குழு :

திரு. மு. அருணசலம்
செந்தமிழ்க் கலாநிதி
திரு. கா. ம. வேங்கடராமையா
முதுமுனைவர்
ச. தண்டபாணி தேசிகர்
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்முதலியார்
திரு. க. வச்சிரவேல்முதலியார்
புலவர் திரு. கீரன்
டாக்டர் டி. பி. சித்தலிங்கையா
டாக்டர் கு. சுந்தரமூர்த்தி
பனசை. திரு. சுவாமிநாதன்

உள்ளே :

1 பெருமான் புகழ்
2 ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300ஆம் ஆண்டு நிறைவு
3. ஸ்ரீ காசிமடத்துத் திருமரபுத் தொகை
4. சைவசமய குரவர் பணிகளும் அவற்றின் பயன்களும்
6 திருச்சதகமும் கருவைப் பதிற்றுப்பத்தந்தாதியும்
6 ஆன்மாவேறு - உயிர்வேறு
7 நூல் நிறை
8 ஆலயபூஜைப் படிக்காசுநிதி
9. பண்டார மும்மணிக்கோவை
10. ஞானமிர்தம்

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர்.

பெருமான் புகழ்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்
"கயிலைமாமுனிவர்" ஸ்ரீ ல ஸ்ரீ

காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

தெய்விகம் பாடிய கவிஞர் பெருமக்கள் இறைவனைக் காதலனாகவும், தன்னைக் காதலியாகவும் வைத்துப் பாடும் ஓர் உத்தியைப் பயன்படுத்திப் பாடினார்கள். அதனை "நாயக நாயகிபாவம்" அமைந்த பாடல்கள் என்பர். சிதம்பரச் செய்யுட் கோவையின் 18 ஆம் திருப்பாடல் இவ் வகையில் அமைந்த பாடலாகும். சிதம்பரச் செய்யுட் கோவையின் 29 ஆம் திருப்பாடலாகிய

உம்பர் பெருமாற் கொளிர்சடிலம் பொன்பூத்த
தன்பொற் புயம்வேட்டேம் தார்முலையும் பொன்பூத்த
பொன்பூத்த பூங்கொன்றை சூழ்ந்து.

என்னும் திருப்பாடல் கடவுண்மாட்டு மானுடப் பெண்டிர் நயத்த் பக்கம் என்னும் வகையில் அமைந்த அகப்புறப் பாடல் எனப்பெறும் இப்பாடாண் திணையின் துறை பிற் காலத்தில் சிற்றிலக்கியமாக வளர்ச்சியுற்றது. நாயகநாயகி

பாவம் என்பது தெய்விகப் பனுவல்களில் மட்டும் தோன்றி வளர்ந்ததோர் உத்தியாகும். கடவுண் மாட்டு மானுடப் பெண்டிர் நயந்த பக்கம் என்னும் பாடாண் திணைத்துறை அமைந்த பாடல்களுள் தலைவியின் வேட்கை நிறைவேற்றம் பெருத வேட்கையாகவே அமைந்திருக்கும். அதில் தத்துவக் கூறுகட்கு அதிக இடமில்லை மானுடப்பெண் மானுடன் ஆகிய ஆணை விரும்பினல் இப்படித்து எனக் கூறவியலாத அகம் ஆகிறது. தெய்வத்தை விரும்பும்போது அது கூறத் தகுந்ததாகிப் புறம் ஆகிறது உணர்வளவில் அகம், தன்மை யளவில் புறம் என்றதோர் இலக்கண நுணுக்கமே அத் துறையின் பெரும்பயனகும் நாயக நாயகி பாவம் அமைந்த பக்திப்பனுவல்கள் தத்துவங்களில் முகிழ்ந்தவையாகும். கட்டறுத்து வீடு பெறற்கான கல்விக்குரியவையாகும். "யாங்கள் எம்மில்பிருந்து ஒட்டிய கச்சங்கம் யானும் தானும் அறிவேம்" என அவ்வேட்கை பழுதத விதங்களையும் உறுதற்கு உரியதாகும் "நங்கை தலைவன் தாள் தலைப் பட்டாள்" என்ற முடிவுக்கு நாயகநாயகி பாவத்துப் பனுவல்களில் மட்டுமே இடமுண்டு.

தில்லையம்பலத்துட் கூத்தன் திருநடம் புரிகிருன். அப் பெருமான் தேவர்கட்கெல்லாம் பெருமான். அவனுடைய சடை பொன்னிறமான சடை. அவனணிந்திருக்கும் மாலையும் பொன்னிறமான கொன்றை மலர்மாலை. ஆடும் இடம் பொன்னம்பலம். அவன் தோள்கள் பொன் தோள்கள். எல்லாம் பொன்மயம்

மானுடப் பெண்களுக்கும் பொன்னென்ருல் அதிக ஈடு பாடுண்டு. எல்லாமே பொன்மயமாக இருக்கும் ஓரிடத் திற்குப் புண்ணியப் பேற்றினல் வந்த ஒரு பெண் வியந்து தன் வேட்கையைப் பேசுகிருள். அந்தப் பெண் அப்பெரு

மானின் பேரழகில் ஈடுபட்டுத் தடுமாறிப் பேசுகிருள்: அவளின் தடுமாற்ற உரையிலும் ஒரு சாமர்த்தியம் இருக்கிறது

பனியைப் பார்த்த மாத்திரத்தில் குளிர்ந்து விடுவது கிடையாது. நெருப்பைப் பார்த்த மாத்திரத்தில் எரிந்து விடுவதுகிடையாது. அப்படியெல்லாம்நடந்தால் அதிசயமே யாகும். பொன்னைப் பார்த்தாள்; அவள் மார்பு பொன் ஞகி விட்டது. இது அதிசயம்தானே!

அவன் இறங்கிவரவில்லையே என்ற ஆற்ருமையுடன் தான் அவனை உம்பர் பெருமான் என்று அறிமுகப்படுத் துகிருள். அவன் திருமுடியைப் பார்த்த சுவையை "ஒளிர் சடிலம் பொன் பூத்த" என்று வருணிக்கிருள். அடுத்துப் புயத்தைப் பார்க்கிருள். அந்தப் பொற்புயத்தை நான் விரும்புகிறேன் என்கிருள். அப்பொற் புயத்தை நயந் தவர்கள் பலருண்டு என்பதை அவள் நன்கறிவாள். அதனுலேயே "புயம் வேட்டேம்" என உளப்பாட்டுத் தன்மைப் பன்மையாக உரைக்கிருள். அதன் பிறகு அவ ளுக்கு ஒருண்மை நினைவுக்கு வருகிறது. ஆண், தான் அணிந்திருக்கும் மாலையைக் கொடுத்தால் அந்த மங்கையைத் தானும் விரும்புகிருள் என்பது பொருள். அதனுலேயே தூது நூல்களின் தலைவியர் "மாலை பெற்றுவா" என வேண்டுவர். எனவே இனித் தோள்களைப் பார்த்துப் பயனில்லை. அத்தோள்களைக் கூடுதற்கு அவனணிந்துள்ள மாலையைப் பெற வேண்டும் என்று கருதுகிருள். என்ன ஆச்சர்யம்! அதுவும் பொன்னிறமாலை!

வேட்கை மீதூரப்பெற்ற தலைவிக்குச் சுணங்கு பூக்கும் அது தேமல் போன்றது. பொன்னிறமானது. இந்தத் தலை விக்கும் சுணங்கு பூத்தது. அதனைத் "தார்முலையும் பொன் பூந்த" என்கிருள். இதைச் சொல்லும் போதுதான் தலைவி தடுமாறி இருக்கிருள் என்பதை அத்திருப்பாட்டு, காட்டிக் கொடுக்கிறது.

ஆண்கள் அணிவதனை "தார்" என்றும், பெண்கள் அணிவதனை "மாலை" என்றும் கூறுவது கவிமரபு. "தாரும் மாலையும் மயங்கிக் கைபற்று" என்ற சிலம்புத் தொடர் இம்மரபுக்கு அரண் செய்யும் இடமாகும். இந்தத் தலைவி தன் மார்பைத் "தார்முலை" என்கிருள். தலைவனின் தார்வேட்ட அம்மயக்கத்தினல், அதைத்தான் பெற்றுக் கொண்டதாகத் தானே செய்து கொண்ட கற்பனையினல் இப்படி மயங்கிக் கூறினள். இவ்வண்ணம் சுவைக் களஞ் சியமாக விளங்கும் திருப்பாடலே,

"உம்பர் பெருமாற்கு ஒளிர்சடிலம் பொன்பூத்த
தன்பொற் புயம்வேட்டேம் தார்முலையும் பொன்பூத்த
பொன்பூத்த பூங்கொன்றை சூழ்ந்து"

என்பதாகும். இத்திருப் பாடலின் கீழ்,

"இஃது இரண்டுவிகற்பத்தான் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா. இதன் முதலடியின் இறுதியெழுத்து இரண்டாமடிக்கு முதலாகவும், அவ்வடியின் இறுதிச் சீர் மூன்ருமடிக்கு முதலாகவும் தொடுத்தமையால் அந்தாதித் தொடை"

என்ற செய்யுள் இலக்கணக் குறிப்பு உள்ளது. இவ்விலக் குறிப்பைச் சற்று ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

விகற்பம் என்பதன் விளக்கம் இக்கட்டுரைத் தொடரில் முன்னரும் கூறப்பெற்றுள்ளது. விகற்பித்து வருவது விகற்பம். செய்யுளியக்கண கர்த்தாக்களும் கவிஞர்களும் எதுகையின் எண்ணிக்கை என்னும் பொருளில் இச் சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

உம்பர் பெருமாற்கு என்று தொடங்கும் இப்பாடலில் முதற்சொல்லின் இரண்டாமெழுத்து மகர ஒற்ருகும்.

இரண்டாம் அடி தன் என்றும், மூன்றும் அடி பொன் என்றும் தொடங்குகின்றன. இவ்வகையில் மகர ஒற்று ஓரெதுகையாகவும், னகரஒற்று மற்றோரெதுகையாகவும் அமைந்து இருவிகற்பம் ஆகிறது என்பது மேற்கண்ட இலக்கணக் குறிப்பின் விளக்கமாகும். ஆனால்

" வருக்கம் நெடிலினம் வந்தால்
எதுகையும் மோனையும் என்று
ஒருக்கப் பெயரான் உரைக்கப்பெறும் "

என்னும் காரிகையின் ஒழிபியல் தொடர் வருக்க எழுத்துக்கள் நெடிலெழுத்துக்கள் இன எழுத்துக்கள் வரின் ஓரெதுகையாக, ஒரு மோனையாகக் கொள்ள இடந்தருகிறது.

ங்ஞ்ண்ந்ம்ன் என்பன மெல்லின எழுத்துக்கள் ஆனமையால் ன், ம் என்பன ஓரின எழுத்துக்கள் எனப் பெறும். இவற்றுன் உம், தன், பொன் என்பவற்றுள் உள்ள எதுகை ஓரின எதுகை எனப்பெறும். எனவே ஒரு விகற்பம் ஆகிறது. இவ்விதி இருக்க இருவிகற்பம் எனக் கூறியுள்ளமையால், இன எதுகையமையின் ஒரு விகற்பமாகக் கொள்ள லாகாது' என்ற கொள்கையின ராக ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் விளங்கினர் எனக் கொள்ளலாம். அல்லது ஸ்ரீ சுவாமிகள் இவ்விலக்கணக் குறிப்பைச் செய்தாரல்லர் என்பதற்கு இதனையும் ஓர் ஏது வாகக் கொள்ளலாம். சிதம்பரச் செய்யுட் கோவைப் பாடல்களின் கீழ்க்காணப் பெறும் செய்யுள் இலக்கணக் குறிப்புக்களை ஸ்ரீ சுவாமிகளே செய்தார்கள் என்றும் அல்ல என்றும் இருவேறு திறத்தினர் இன்றும் உளர்.

போற்றுமின் என்று தொடங்கும் பாடல் ஒருவிகற் பத்து இன்னிசைச் சிந்தியல் வெண்பா; உம்பர் எனத்

தொடங்கும் பாடல் இருவிகற்பத்து இன்னிசைச் சிந்தியல் வெண்பா; கருமிடற்றன் என்று தொடங்கும் பாடல் பல விகற்பத்து இன்னிசைச் சிந்தியல் வெண்பா எனக் குறிப் பிட்டுள்ள முறை வைப்பு ஸ்ரீ சுவாமிகளே இவ்விலக்கணக் குறிப்பைச் செய்தார்கள் என்ற கருத்துரைப்போர்க்கு அரண்செய்யும் எனினும் முன்னர் இம்முறை பின்பற்றப் பெறவில்லை என்பதும் "ஒன்றும் பலவும் விகற்பொடு" எனவே காரிகை அமைந்துள்ளமையாலும், தொடை, தொடை விகற்பங்களை மெய்ப்பித்தற்கும் ஆங்காங்குச் செய்யுட் செய்துள்ளாராகையாலும், இஃது அந்தாதித் தொடைக்கு உதாரணமாதல் தெள்ளிதாகலானும் அக் கருத்து மீண்டும் கருதுதற்குரியதாகும்.

"அந்தமுதலாத் தொடுப்பது அந்தாதி" எனக் காரிகை கூறுகிறது. அஃது எழுத்தந்தாதி, அசையந்தாதி, சீரந் தாதி, சொல்லந்தாதி, அடியந்தாதி என ஐவகைப்படும் என்பதைக் காரிகையின் "உலகுடன் விளங்கும்" என்னும் உதாரணச் செய்யுட்களால் அறியலாம்.

உம்பர் பெருமாற்கு எனத்தொடங்கும் இப்பாடலின் முதலடி பூத்த என முடிகிறது. அடுத்த அடி 'த' எனத் தொடங்குகிறது. இரண்டாமடி பொன்பூத்த எனமுடி கிறது. மூன்றாமடி "பொன்பூத்த" எனத் தொடங்குகிறது. அடியந்தாதி தவிர மற்ற நான்கும் அமையுமாறு மூன்றடியி லேயே செய்தமைத்த ஸ்ரீ சுவாமிகளின் "கவி சொல்ல வல்ல நல்வித்தை" நினைந்து இன்புறற்குரியதாகும்.

— *சிவ சிவ*

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

300 ஆம் ஆண்டு நிறைவு

ஆலோசனைக் கூட்டம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளை ஆட்கொண்டு ஞானோபதேசம் அருளிய தருமையாதீனம் நான்காவது குருமூர்த்திகள் ஸ்ரீமாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருமூர்த்தத்தில் சிறப்பு வழிபாடாற்றி, 8-11-87 காலையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

தருமையாதீனம் 26 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ குருமகா **சன்னிதானம்** பிரசன்னமாகி அருளாசி வழங்கி ஆலோசனைக் கூட்டத்தை நிகழ்த்தியமை வரலாற்றுப் புகழுடையதாகும். திருப்பனந்தாள் ஸ்ரீ **காசிமடம் அதிபர் கயிலைமாமுனிவர்** ஸ்ரீலஸ்ரீ **காசிவாசி எஜமான் சுவாமிகள்** முன்னிலையில் தமிழகத்தின் பல்வேறு ஊர்களிலிருந்தும் வந்திருந்த சிறப்பு அழைப்பாளர்கள் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு நிறைவு விழாவைப் பயனுள்ளவகையில் நடத்துதற்கான திட்டங்களைக் கலந்து ஆய்ந்தனர். அகில இந்திய அளவிலான விழாக்குழு அமைக்க நகல் தயாரிக்கப் பெற்றுள்ளது.

ஸ்ரீ குமர குருபர சுவாமிகளின் அருள் ஞானத் தலைமுறையின் இருபத்தொன்றாவது தீபம் தற்போது பிரகாசித்துக் கொண்டிருத்தலையொட்டி, ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் அவதாரத் தலமாகிய ஸ்ரீவைகுண்டத்தில் தொடங்கி ஸ்ரீ வாரணசி வரை இருபத்தொரு நகர்களில் 300 ஆம் ஆண்டு நிறைவு விழாக்களை நிகழ்த்துவதென முடிவு செய்யப் பெற்றுள்ளது. அவற்றுள் ஸ்ரீ சுவாமிகளின் பிரபந்தங்கள் பெற்ற தலங்கள் அனைத்தும் அடங்கும். ஆங்காங்கே துணைக் குழுக்கள் அமைக்கப் பிரமுகர்கள் ஏற்பாடுகள் செய்வர்.

ஸ்ரீ குமர குருபர சுவாமிகளின் பெருமைகளையும், ஸ்ரீ காசிமடத்தின் பெருமைகளையும் கூறும் பிரசுரமொன்று வெளியிடப் பெற்றது.

அதன் பிரதிகள் சிறப்பு அழைப்பாளர்களுக்கும் செய்தியாளர்களுக்கும் வழங்கப் பெற்றன.

வரும் பிரபவ ஆண்டு வைகாசித் திங்களில் (88-மே) ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் 300 ஆவது ஆண்டு நிறைவு பெறுகிறது. அது முதல் ஓராண்டுக்காலம் (89 ஏப்பிரல் முடிய) விரிவான அளவிலும் பரவலாகவும் நிறைவு விழாக் கொண்டாட்டங்களை நிகழ்த்தத் திட்டங்கள் தயாரிக்கப் பெற்றுள்ளன. நூல் வெளியீடுகள் நினைவுக்கட்டிடத் திறப்புக்கள், கல்லெழுத்துக்கள் அமைத்தல், நினைவுச் சின்னம் அமைத்தல், கருத்தரங்குகள் நிகழ்த்துதல், சிறப்பு மலர் வெளியீடு உள்ளிட்ட பல்வேறு பணிகட்கான ஆலோசனைகள் தெரிவிக்கப் பெற்றுப் பணி வரன்முறைகள் வகுக்கப்பெற்றன. யாவும் விளக்கமாக அடுத்த இதழில் வெளியிடப்பெறும்.

திரிவேணி சங்கமம்

கங்கையும் யமுனையும் சரஸ்வதியும் ஆகிய மூன்று நதிகள் ஒன்று கூடும் இடம் திரிவேணி சங்கமம். ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் இக்காட்சியைத் தமது பிரபந்தப் பாடல்களில் ஒப்புமைக்கு எடுத்தாளுகிறார்.

வையையில் மகளிர் நீராடுகின்றனர். அவர்கள் பூசிய செஞ்சந்தனக்குழம்பும், கரிய கத்தூரிக் குழம்பும், வெள்ளிய பச்சைக்கர்ப்பூரக் கலவையும் வையை நீரில் கரைந்து ஓடும்போது, அந்த மூன்று நிறமும் வையையில் தெரிவதால் அது திரிவேணி சங்கமம் போல் காட்சி தருகிறது. இவ்வாறு மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் ஸ்ரீ குமரகுருபரர் எடுத்துரைக்கிறார்.

திருவாரூர் வீதியில் பன்னிற மணி பதித்த மாடங்கள் விளங்குகின்றன. அங்கே வைரமணிகள் வெண்மை ஒளி வீசவும், நீலமணிகள் கரிய ஒளி வீசவும், மாணிக்க மணிகள் செம்மை ஒளி வீசவும் செய்கின்றன. இந்த மூவகை ஒளியும் வீதியில் ஒருசேர வீசுவதால் திருவாரூரின் வீதியில் கங்கையும் யமுனையும் வாணியும் ஒருசேர ஓடுவது போல் (திரிவேணி சங்கமம் போல்) காட்சி தருகிறது. இவ்வாறு திருவாரூர் நான்மணி மாலையில் ஸ்ரீ குமரகுருபரர் உணர்த்துகிறார்.

ஸ்ரீ காசிமடத்துத் திருமரபுத் தொகை

செந்தமிழ்க் கலாநிதி கா. ம. வேங்கடராமையா.

=×=

திருக்கயிலைப் புரமென்னும் ஸ்ரீ வைகுண் டத்தில்
திருச்செந்தி லாண்டவரின் திருவருளால் தோன்றித்
திருத்தரும புரந்தன்னில் சிவதீக்கை பெற்றுச்
சீராரும் மாகிலா மணியார்க்கா ளாகி
அருளாரும் காசிதனில் அழகுமடம் கண்ட
ஆதிதிரு குமரகுரு பரமுனிவர்க் கடியேம்
அருட்குமர குருபரரின் திருமரபில் வந்த
அருள்முத்துக் குமாரசுவாமி அம்மானுக் காளேம். (1)

கந்தர்கலி வெண்பாவை முதலாக வைத்துக்
கனிதமிழிற் பிரபந்தம் பதினொன்கு பாடித்
தந்தமுனி குமரகுரு பரர்க்கடிமை யுற்றுச்
சங்கரன்தாள் சேர்சொக்க நாதர்க்கும் அடியேம்
அந்தண்அரு ளார்அருண சலமுனிவர்க் கடியேம்
அன்பார்அம் பலவாணர் முனிவர்க்கு மடியேம்
அந்தமில்சீர் சடையப்ப முனிவர்க்கு மடியேம்
அருள்முத்துக் குமாரசுவாமி அம்மானுக் காளேம். (2)

சும்மைமிகு கங்கைநதி சூழ்காசி நகரில்
தோற்றஞ்சால் கேதார கட்டமரு குற்ற
செம்மைமிகுங் காசிமடம் தன்னதற்கோர் கிளையாய்ச்
செழும்பனசை நகரதனில் திருமடமொன் றாக்கி
மும்மைமலம் ஒடுங்குவித்து முத்திநெறி பெற்ற
முனிதில்லை நாயகராம் அடியார்க்கு மடியேம்
அம்மையைப்போல் கிளைந்தருளிச் சுரக்கின்ற செம்மல்
அருள்முத்துக் குமாரசுவாமி அம்மானுக் காளேம். (3)

பத்திமிகப் போதொடுநீர் சுமந்தேத்தி என்றும்
பரமகுரு திருச்செந்தி லாண்டவனை ஏத்தி
முத்திபெறு குமரகுரு பரரென்னும் ஏழாம்
முறைவந்த பட்டத்து முனிவர்க்கு மடியேம்
சத்தியவள் காணநடம் புரிவானூர்ப் பெயரைத்
தாங்குசிதம் பரநாத முனிவர்க்கு மடியேம்
அத்திகரைந் துள்ளுருகிச் சிவபூசை செய்யும்
அருள்முத்துக் குமாரசுவாமி அம்மானுக் காளேம். (4)

முப்பத்தெட் டாண்டளவும் காசிமடம் தன்னில்
முறையாகச் சைவத்தின் செங்கோலை ஓச்சிச்
செப்பருஞ்சீர் பனைநகர்ச் செஞ்சடையான் பெயரால்
திகழ்வுற்ற சடையப்ப முனிவர்க்கு மடியேம்
துப்பாரும் திருமேனிச் செந்திலன்பால் அன்பு
தோய்வுமிகும் கணபதியாம் முனிவர்க்கு மடியேம்
அப்பூதி திருநீறே எனப்பூசி மகிழும்
அருள்முத்துக் குமாரசுவாமி அம்மானுக் காளேம் (5)

ஊனாகி உயிராகி உயிருக்கோர் உயிராய்
உலகெங்குத் தானாகிப் புனலாகி அனலாய்
வானாகி வளியாகி நிற்கின்ற இறைவன்
வடிவாகித் திகழ்கின்ற இராமலிங்கர்க் கடியேம்
தேனைய அமுதாய திருவைந்தெ ழுத்தைச்
சிந்தித்துச் சிவனடிசேர் சொக்கலிங்கர்க் கடியேம்
ஆனயம் மிகுபனசை அடியோமை ஆளும்
அருள்முத்துக் குமாரசுவாமி அம்மானுக் காளேம் (6)

முகத்திலருள் ஒளிவீச முறைசெய்த சைவ
முனிவர்திரு கணபதியார் அடியார்க்கு மடியேம்
சகத்திலுயர் வயற்பனசைக் காசிமடம் தன்னில்
தகைபூசை மடம்எட்டுத் திருமகளின் கூடம்
இகத்தோடு பரசுகஞ்செய் விஸ்வேசர் கோயில்
இனையபல திருப்பணிசெய் இராமலிங்கர்க் கடியேம்
அகத்தாடு கசிந்துருகி அடியோமை ஆளும்
அருள்முத்துக் குமாரசுவாமி அம்மானுக் காளேம் (7)

கரியமால் காணாத கழலடியைக் கண்ட
கண்பொன்னம் பலமுனிவர் அடியார்க்கு மடியேம்
அரியதேர் ஐந்தோட்டி விஸ்வேசர் விழாவை
அணிசெய்த நற்சோம சுந்தரர்க்கு மடியேம்
உரியபதி னேழாகும் பட்டமதில் வந்த
உயர்முனியாம் சொக்கலிங்கர் அடியார்க்கு மடியேம்
அரியகா யகராகி அடியோமை ஆளும்
அருள்முத்துக் குமாரசுவாமி அம்மானுக் காளேம் (8)

மெய்யடிமை செய்ததிரு அடியார்க்கு மேலாய்
மெய்ஞ்ஞானச் செந்தமிழை விளக்கிவிரி வாக்கிப்
பொய்யடிமை யில்லாத புலவரென மேவிப்
புகழ்பதினெட் டானதிருப் பட்டமதில் வந்து
செய்யசிவ சைவத்தின் செங்கோலை ஓச்சித்
திகழ்ந்தமுனி சொக்கலிங்கர் அடியார்க்கு மடியேம்
ஐயமிலா அன்புடனே அடியோமை ஆளும்
அருள்முத்துக் குமாரசுவாமி அம்மானுக் காளேம் (9)

சிவனுய்ந்த இயற்றமிழ்க்கோர் ஆயிரமாம் பரிசும்
சித்தாந்தப் பரிசோடு திருமுறையின் பரிசும்
உவகையிசைத் தமிழ்ப்பரிசும் அகப்பொருளின் பரிசும்
உயர்யாப்புப் பரிசுமென ஈரேழ்மேல் வைத்துப்
புவனியிடைப் புலவர்புகழ் பொலிவெய்தி வாழ்ந்த
புண்ணியராம் சாமிநாத சுவாமிகளுக் கடியேம்
அவனியிடை யுயர்பனசை அடியேமை ஆளும்
அருள்முத்துக் குமாரசுவாமி அம்மானுக் காளேம். (10)

மன்னியசீர் மறைவளர வான்சைவம் வளர
மாதேவன் திருமுறைகள் சித்தாந்தம் வளரத்
தென்னாட்டும் எந்நாட்டும் செய்தருமம் வளரச்
சிவசிவநல் ஒளிவளரச் செந்தமிழும் வளர
நன்னிதிகள் ஐந்நூற்று முப்பத்து முன்றை
நாட்டியசீர் அருணந்தி முனிவர்க்கு மடியேம்
அன்புமலி அடியரேம் அடிமைகேட் டுவப்பார்
அருள்முத்தாம் அம்மானுக் கன்பரா வாரே. (11)

சைவ சமயகுரவர் பணிகளும் அவற்றின் பயன்களும்

கோவை கிழார்

சைவசமயம் பல நூற்றுண்டுகளுக்கு முன்னர் அகில இந்தியா முழுவதும் பரவியிருந்த சமயமாக விளங்கியதென்பது ஆராய்ச்சியாளர் கண்ட உண்மையாகும். அது தற்போது தென்னிந்தியாவில் காணப்பெறும் பல சமயங்களுள் மிகப் பாராட்டப்படும் சமயம் என்பது ஒருதலை. எல்லாச் சமயங்களுள்ளும் சீர்கேடுகள் வருவது போல் சைவசமயமும் காலபேதத்தால் சுருங்கும் நிலைமை பன்முறை பெற்றது. அவ்வப்போது சமய விளக்கத்திற்காகப் பல சைவப் பெரியார்கள் இறைவனது திருவருளால் திருவவதாரஞ் செய்வார்கள். அங்ஙனமே நால்வர் எனப்படும் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சைவப் பெரியார்கள் தென்றமிழ் நாட்டில் தோன்றினர்கள். இவர்களுள் மாணிக்கவாசகர் நான்காம் நூற்றுண்டில் விளங்கியவர். காலவாராய்ச்சியாளர்கள் இவரது காலம் 10 - ஆவது நூற்றுண்டு வரையும் குறிக்கின்றுர்கள். சம்பந்தரும், நாவுக்கரசரும் ஒரு காலத்திலிருந்தவர்கள். அவர்களது காலம் 6 அல்லது 7 - ஆவது நூற்றுண்டு என்பர். சுந்தரர் ஒன்பதாம் நூற்றுண்டில் திகழ்ந்தவர். எனவே சைவசமயக் குரவர்கள் தங்கள் பணிகளை நான்காம் நூற்றுண்டுமுதல் ஒன்பதாம் நூற்றுண்டுவரை செய்து வந்தனர்.

இக்கால வரையறையுள் தமிழ் நாட்டில் சமயநிலை எங்ஙனமிருந்ததென்று ஆராய்வோம். சமயங்களின் வளர்ச்சியும் நாடாளும் அரசனை யொட்டியிருந்தது என்று சொல்லுதல் வேண்டும். தமிழ்

கோவை கிழாரின் நூற்றுண்டு நினைவாக இக்கட்டுரை வெளியிடப் பெறுகிறது.

நாடு மூவேந்தர்களாகிய சேர சோழ பாண்டிய மன்னர்களால் ஆளப்பட்டது. அவ்வரசர்கள் எச்சமயததைப் பற்றியிருந்தனரோ அதனையே அவர்கள் கீழ்வாழும் குடிகள் பற்றி நின்றனர். மாணிக்கவாசக சுவாமிகள் காலத்தில் சோழ பாண்டிய அரசர்கள் சைவர்களாக இருந்தனர் என்றறிகின்றோம். ஈழநாட்டரசன் பௌத்த சமயத்தைச் சார்ந்தவனாக இருந்தனன். இந்திய சரித்திர வாராய்ச்சியாளர் மூன்றும் நூற்றாண்டில் விளங்கிய அசோகன் என்னும் வடநாட்டுப் பேரரசன் தென்னாட்டில் தமது சமயக் கொள்கைகளாகிய பௌத்தக் கொள்கைகளைப் பரவச் செய்யப் பல பௌத்தபிக்குகளை அனுப்பினன். அவர்களே தமிழ்நாட்டில் பௌத்தத்தைப் பரப்பினர். அதற்கு முன்னரும் பௌத்த சமயமும் ஒருவாறு விளங்கியிருந்ததென்று கூறுதல் வேண்டும். மூன்று நான்காம் நூற்றாண்டுகளில் அரசர்களது சார்பு அச்சமயம் பெற்றிருந்ததாகச் சான்றுகளில்லை. பின்னர் ஐந்தாம் நூற்றாண்டில் வடநாட்டுப் பேரரசனான சந்திரகுப்தமௌரியர் காலத்து விளங்கிய பத்ரபாகு என்னும் சமணமுனிவரது சீடர்கள் தமிழ்நாட்டில் போந்து சமணசமயத்தைப் பரப்பினர். ஐந்தாம் நூற்றாண்டு முதல் ஏழாம்நூற்றாண்டு முடியும்வரை சமணசமயம் மிகுந்தோங்கியிருந்ததெனலாம்.

பின்னர்ப் பன்னிரண்டு நூற்றாண்டு வரையிலும் ஒருவாறு இச்சமயம் நிலவியிருந்தது. மேற்கூறிய காலத்தில் தமிழ்நாடு முழுவதும் சமணசமயமே நிலைத்தது. அரசர்கள் அச்சமயம் தழுவினர். குடிகளும் அவர்வழி நின்றனர். மற்றச்சமயத்தினர் இல்லையென்பதில்லை. குடிகள் யாவரும் தத்தம் சமயக் குழுவினருடன் வாழ்ந்து வந்தார்கள். தங்கள் வழிபாட்டைத் தத்தம் சமயமுறைப்படி நிகழ்த்தினர். ஆறு ஏழாவது நூற்றாண்டுகளில் பாண்டிநாட்டிலும் நடுநாட்டிலும் சமணசமயம் உயர்ந்த நிலையிலிருந்தபோது அரசர்கள் பிறசமயத்தார்களை வருத்தி வந்தனர். அரசியல் நீதிகள் அவர்கள்பால் பிழைபட்டன. அரசியல் குற்றங்கள் பெருகின. பௌத்தசமணசமயங்கள் தாழ்ந்தநிலையை அடையத் தொடங்கியபோது அச்சமயங்களில் மக்கட்குப்பற்று நீங்க ஆரம்பித்தது இவைகளைப் போக்கிச் சைவநன்முறையைக்

கடைப்பிடிக்கச் செய்வதே சைவசமயக் குரவர்களது பணியாக யிருந்தது.

சமயக்கொள்கைகள் பரவுகின்றபோது ஆரம்பகாலத்தில் மக்கட்கு அவற்றினிடத்து இச்சையும், பரபரப்பும் ஏற்படும். பின்னர் நடைமுறையில் வரும்போது அவைகுறையும். நாட்கள் செல்லச் செல்ல அச்சமயக்கொள்கைகள் அறவே நீங்கி மற்றொரு சமயத்தின் மீது நாட்டமாவது இயல்பு. இந்தப் பொதுமுறையில் சமண பௌத்தசமயங்களும் நிலைபெற்றிருந்து பின் ஆதிக்க மிழந்தன.

வேதமார்க்கம் கைக்கொண்டு பல உயிர்க்கொலை நேர்வது அறிந்தும் கடவுள் பேரால் பல குற்றங்கள் செய்யப்படுவது கருதியும் அவைகளை நீக்கக் கௌதம புத்தர் பௌத்தக் கொள்கைகளைப் பரப்புவான் துணிவுகொண்டார். கொல்லாமையை மக்கள் விரும்பினர். பின்னரும் உலகநிலையாமை, யாக்கை நிலையாமை, துக்க நீக்கம் இன்னவை பிறவும் இச்சமயத்தினர் போதிக்க அவர்கட்குக் கிளர்ச்சி உண்டாக இச்சமயமே சிறந்ததென யாவரும் கொண்டனர். பல ஆண்டுகள் கடந்தபின் மக்கள் தம் அறிவு மிகுதியினல் எல்லாம் நிலையற்றனவாயின் தமது கதியென்னவென ஆராய்ந்தனர். நிர்வாணம் எனும் முடிவைப்பௌத்தர்கள் கூறிய போதினும் அவர்களுள்ளம் பற்றவில்லை. கடவுளிருப்பை உணரலாயினர். எச்சமயம் கடவுளிருப்பைப் போதித்து மற்ற நிலையாமைகளைக் கூறி அக்கடவுளைச் சார்தற்கு வழிகளைக் கூறுகின்றதோ அச்சமயத்தையே மக்களறிவு நாடவிருந்தது. அவ்வமயம் சமண சமயம் அவர்களையீர்த்தது.

சமணர்கள் இறைவன் அருகக் கடவுள் என்றும் உணவின்றியிருத்தல், சுடுபாறையில் கிடத்தல், தலைமயிர் அழித்தல் முதலிய விரதங்களோடு ஐவகைச் சீலங்களுடையவராயிருந்து அவ்வருகக் கடவுளடி நீழல் அடைதல் வேண்டும் என்றும் உணர்த்தி வந்தனர். நாளடைவில் இவைகளிடத்துப் பற்றில்லாமை தொடங்கியது. இந்த நிலையில் சைவசமயக் குர

வர்கள் பணிகள் தொடங்கினர் என்று கூறுதல் பொருந்த முடைத்தாம்.

அறிவு விளக்கங் கொண்ட மக்கள் சமத்தின் பயனுவது பாச விடுதலை அடைந்து இன்பநிலை பெறுவதே என்றறிந்தார்கள். இன்பப்பேறு வெறும் யோகத்தாலும் விரதங்களாலும் அடைவதன்று என்றுணர்ந்தார்கள். சமயத்தின் பயனுவது உயிர்களது துன்பம் மாற்றுவதே என்பது திருஞானசம்பந்தர் கருத்து. இன்பப்பேற்றை அடைதற் பொருட்டாகப் பௌத்தர்களினுல் கற்பிக்கப்பட்ட போகமும், சமணர் விரதங்களும் போலியாக ஒழிய மக்கட்குப் புதியதோர் உணர்ச்சி பரவத்தொடங்கிற்று. சமய வாழ்க்கையில் அதிசயத் தோற்றங்கள் விளைவதாயின் அச்சமயமே சிறந்ததெனக் கொள்ளும் கருத்துடையவர்களானுர்கள் அத்தோற்றங்கள் காண்பது கருதி இறைவனது உருவம் அமைத்து வழிபாடுசெய்து அவனேடு ஒட்டிஒன்றித் தம்மை மறந்து நிற்கும் நிலையையே விழைந்தார்கள். இறைவன் புகழைப் பாடுதலே அவர்கள் உள்ளங்கவர்ந்தது. இவைகளையே தங்கள் துக்க நீக்கத்திற்குச் சிறந்த சாதனங்களாகக் கருதினுர்கள். சைவ சமயக் குரவர்கள் திருவவதாரம் செய்து, இறைவனுண்மையை மறுத்துத் தம் முயற்சினுல் நிகழும் யோகத்தினையும் உடம்பினை விரதங்களால் பயனின்றி வாட்டுதலையும் இழித்தும் பேசி, இன்பம் பெறுதலே தமது குறிக்கோளாகக் கொண்டு இறைவனது குறிப்புக்களையும் அடையாளங்களையும் திருக்கோயில்களிலும் தமது உள்ளங்களிலும் வைத்து புனலும் மலரும் கொண்டு போற்றிச் சிவாநுபவத்தில் நின்று பற்பல அதிசயங்கள் செய்தனர். பாம்பின்விடம் மாற்றுதல், முதலையுண்ட பாலகனை வரவழைத்தல், என்பினின்றும் பூம்பாவையை எழுப்புதல், கடலில் கல்மிதப்பித்தல், ஊமையைப் பேசுவித்தல், பொற்குளம் பெறுதல் முதலியன நிகழ்த்தவே மக்கள் கவர்ச்சி கொண்டனர். சிறந்த ஒழுக்கத்தில் தலைப்பட்டனர். தாம்படுந்துயரம் நீக்கவல்லவன் துக்கம் சிறிதேனுமில்லா இன்ப வடிவினனுயுள்ள இறைவன் ஒருவனுண்டு என்று கண்டனர். அவனது ஏவலில் யாவும் நிகழ்வன என்று அறிந்தார்கள். அவனை அடைதலே பேரின்பம் என்றுணர்ந்தார்கள்.

சைவ சமயக் குரவர்களது அருட்பணியால் வழிபாடின்றிருந்த சிவாலயங்கள் யாவும் சீர்பெற நின்றன. மக்கள் பெரிதும் அவை களைப் போற்றினர். அவர்களது திருப்பாடல்களை இசைகளோடு பாடவும் அவர்களது பணிகளைப் போற்றவும் செய்தனர். பாடல் களின் நுண்பொருள்கள் ஆராய்ந்தவர் பதிமூன்றும் நூற்றாண்டில் சைவ சாத்திரங்கள் இயற்றினர். அவர்கட்குப்பின் வந்தவர்கள் இச்சாத்திர விளக்கங்களைப் பரப்புவான் சைவ மடங்களை நிறுவி பலப்பல பணிகளைப் புரிந்தனர்.

தற்காலத்தில் திருக்கோயில் வழிபாடும் திருவிழாக்களும் அவர்தம் பணிகளின் பயனாய் விளங்குவன. ஆயினும் ஆடம்பரங் கள் மிகுதியாய்ப் புகுந்தன. சமயக்கோட்டைகளாக விளங்குவன திருக்கோயில்கள். மக்கள் தூய ஒழுக்கத்தை அறிதற்பொருட்டும் மனத்தூய்மையடைந்து இறைவன்பால் செல்லும் பேரன்பு அடைதற் பொருட்டும் நிலவுகின்றன. ஒழுக்கம் அறிதல் இறைவன் சம்பந்த மான பேச்சுகளினால் நிகழ்வதாம். பேரன்பு பெறுதல் வழிபாட்டால் ஆகும். முன்னது மறக்கப் பெற்றது. பின்னதில் ஆடம்பரம் புகுந்தது.

ஸ்ரீ குமரகுருபரர் அருள்வாக்கு

1. பரமசிவம் தனக்கென்று ஒருகுறியோ குணமோ கோலமோ பெறாததாகும். அது அங்கிங் கெனாதபடி எங்கும் செறிந்து நிற்கும்.

கந்தர் கலிவெண்பா - (4)

2. இந்திர சாலவித்தையைக் காட்டுகிறவன் தன் வித்தையைக் காண்போர் யாவரையும் மயக்குவான். ஆனால் தன் வித்தையில் தான் மயங்கமாட்டான். அதுபோல இறைவன் மாயைத் தோற்றத் தைக் காட்டி ஆன்மாக்களை மயங்கவைப்பான். ஆனால் மாயையுள் தான் மயங்கமாட்டான்.

கந்தர் கலிவெண்பா - (8)

திருச்சதகமும் கருவைப் பதிற்றுப் பத்தந்தாதியும்

அணிநல ஒப்பீடு

தொடர்ச்சி

ப. பாஸ்கரன் M. A., M. Phil.,

20354

சோதி :

ஞானசம்பந்தர் "சுடர் விட்டுளன் எங்கள் சோதி" என்றார், திருநாவுக்கரசர் "சொற்றுணை வேதியன் சோதி வானவன்" என்றார். மாணிக்கவாசகரும், "ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதி" என்றார். இங்ஙனம் வழிவழியாக சமயப் பெரியோர்கள் எல்லாராலும் ஒருமனதாய் ஏற்றுக் கொள்ளப்பட்ட சோதி வடிவத்தை அண்மைக் காலத்திலிருந்த இராமலிங்க அடிகளாரும் "அருட்பெருஞ்சோதி" என்று உலகறிய எடுத்துரைத்து விளக்கியுள்ளார். அம்முறையிலேயே அதிவீரராமரும் சோதி என்று உருவகித்தது யாவருக்கும் ஒத்த கருத்தமைப்பாகும். ஈண்டுச் சோதி என்றது மொழியியல் நோக்கத்தில் உருவகமாகக் கருதப்பட்டாலும் பொருளியல் படிநோக்கும் போது உருவகமாகாமல் "இறைவன் வேறு, சோதி வேறன்று; சோதியே இறைவன்" என அமைந்திருப்பதால் இறைவனின் உண்மையியல் கூறியதாகும். அதனல் பொருட்பெயர் ஆகுமேயன்றி இது உருவகம் ஆகாமையை அறியலாம்.

மறைக்கொழுந்து :

வேதத்தை அருளிச்செய்தவன் இறைவன். வேதம் நமக்கும் கிடைத்திருக்கிறது. அந்த வேதத்தின் துணையால் இறைவனை அடைய வேண்டும் இறைவன் எங்கே உள்ளான் என்று தேடினல் வேதத்தின் முடிவில் -வேதாந்தத்தில் உள்ளான் என்பதை அறியலாம். எனவே வேதத்தை ஒரு மரமாகக் கொண்டு நோக்கினல் அந்த மரத்தின் உச்சிக் கிளையில் அதி உச்சியில் உள்ள ஒரு கொழுந்துதான் வேதமாகிய மரத்தின் அந்தம். அங்கே இறைவன் உள்ளான். அதனல்

அதிவீரராமர் இறைவனை "மறைக்கொழுந்து" என்று உருவகம் செய்திருக்கின்றார். இக்கருத்தினை மணிவாசகர் திருவெம்பாவையில் "விண்ணுக்கொரு மருந்தை வேத விழுப் பொருளை" என்று குறிப்பிட்டுள்ளார்.

அமுதவாரி :

இறைவன் இன்பமயமானவன். அதுவும் சாதாரண சிற்றின்ப மன்று. என்றும் அழிவற்றதாகப் பூரணமாய்ப் பொங்கித் ததும்பி நிற்கும் பேரின்பம். அதனால் அவனை "அமுதவாரி" என்று அதிவீரராமர் உருவகித்துள்ளார். இதே கருத்தமைய் மணிவாசகரும் "மால் அமுதப் பெருங்கடலே" என்று உருவகித்துள்ளது ஒப்பு நோக்கத் தக்கதாக உள்ளது.

கற்பகக் கனி :

காய் புளிக்கும்; கனி இனிக்கும் - இது பொதுவான கருத்து. எனவே காயைவிடக் கனியையே எல்லோரும் விரும்புவது இயற்கை. வள்ளுவர்கூட "கனி இருப்பக் காய் கவர்ந்தற்று" என்று காயின் இழிவைக் குறிப்பாகச் சுட்டிக் காட்டுகிறார். எனவே உலகில் ஒரு பொருளைச் சிறப்பிக்க விரும்புபவர்கள் அதனைக் கனி என்று உருவகிப்பது உண்டு. கனியை மேலும் உயர்த்த விரும்புவோர் வாழை, மா, பலா என்னும் முக்கனியாகக் கூறுவர். அதனால் உயர்த்த விரும்பினால் தேவர் உலகத்துக் கற்பகமரம் தரும் கனியாகத்தான் கூறவேண்டும். அதற்குமேல் உயர்ந்த மற்றோர் கனியில்லை எனவே தன்னினும் மேம்பட்டது எதுவும் இல்லாத இறைவனைச் சுட்டுவதற்குக் "கற்பகக் கனி" என அதிவீரராமர் உருவகிக்கிறார்.

மாசிலாமணி :

நிலத்தடியிலிருந்து வெட்டி எடுக்கும் மணியிலே மாசு இருக்கும். அதன் மாசு போக்கக் கழுவுதலும், பட்டை தீட்டுதலும் வேண்டும். அதன் பிறகுதான் மணி ஒளி வீசும். இறைவன் இயற்கையிலேயே மாசில்லாதவன் - ஒளிமயமானவன். எனவே இறைவனை மாசிலா மணி என அதிவீரராமர் உருவகிக்கின்றார். மாசிலாமணி என்னும் இதே உருவகத்தை மணிவாசகரின் 543-வது திருவாசகப் பாடலிலும் காணமுடிகிறது.

குணக்குன்று :

மக்கட்குணம் இராசசம், தாமசம், சாத்துவீகம் என்று மூன்று வகைப்படும். இவற்றுள் சாத்துவிக குணத்தை மட்டும் எடுத்துத்

திருவள்ளுவர் "குணமென்னும் குன்று" என்று உருவகப்படுத்தியுள்ளார். இந்த முக்குணங்கட்கு வேருக இறைவனின் குணம் எட்டு உள்ளன. அவற்றை வள்ளுவர் "எண் குணத்தான்" என்ற இடத்தில் குறித்துள்ளார். இந்த எண் குணங்களை உடைமை பற்றி இறைவனை அதிவீரராமர் "குணக்குன்று" என்று உருவகித்தார். மணிவாசகர், 'முக்குணங்கட்கு வேருன எண் குணம்'' என்பதைத் தெரிவிக்க, வேண்டி "குணங்களும் குறிகளும் இலாக் குணக்கடல்" என விளக்கம் கூறிப் புது உருவகம் செய்துள்ளார்.

வேறுசில உருவகங்கள் :-

நெஞ்சு கோயிலே :

'உள்ளம் பெருங்கோயில்' என்று திருமூலரும், "நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டவன்'' என்று திருநாவுக்கரசரும் "சிந்தையே கோயிலாகக் கொண்ட'' என்று மணிவாசகரும் கூறியவாறே அதிவீரராமரும் தனது நெஞ்சைக் களவின் நிழல்போல் குடியிருக்கும் கோயிலாக உருவகம் செய்து உள்ளார். "இறைவா நீர் களா மரத்தின் நிழலில் அன்றோ இருக்கிறீர். உமக்கு இந்த மர நிழலைத் தவிரக் கட்டடமாக ஒரு கோயில் இல்லையோ? இந்த இழி நிலை உனக்கு வேண்டா, எனது நெஞ்சமாகிய கோயிலிருக்கிறது. இங்கே குடிவந்துவிடும்'' என்று ஒரு நயம் பிறக்குமாறு இவ்வுருவகத்தை அமைத்துள்ளார்.

மும்மலக் குழிசி:

உடம்பைக் குயவனுல் செய்த பாண்டம் எனவும், எமகையிதடியனுல் உடைக்கப்படும் மட்கலம் எனவும் சித்தர்கள் உருவகித்துப் பாடுகிறார்கள். பானை என்ருல் அதிலே சோறு இருக்கும் என்று எண்ணுவது பொதுவான நினைப்பு. அந்த நினைப்பை மாற்றி இந்தப் பானையில் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்கள் நிறைந்துள்ளன என விளக்குவதற்காக உடம்பை, "மும்மலக்குழிசி'' என அதிவீரராமர் உருவகித்துள்ளார்.

நோய்க்கணம் ஆடுறும் அரங்கு:

கூத்தரும், விறலியரும் கூட்டமாக இருந்து ஆடுவது அரங்கம். அங்ஙனமே நம்முடைய உடம்பில் நோய்களின் கூட்டம் கூத்தாடுகின்றன. அதனுல் உடம்பை "நோய்க்கணம் துணங்கையிட்டாடுறும் அரங்கு'' என அதிவீரராமர் உருவகித்துள்ளார்.

இதுகாறும் இருபத்தோரு உருவகங்களை எடுத்து ஆராய்ந்தோம். அவற்றுள் பல திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதிக்கும், திருச்சதகத்திற்கும் ஒப்புமை உடையனவாய் அமைந்துள்ளன என்பதை அறிகிறோம். மேற்கண்ட உருவகங்களேயன்றி "வீழிவலை" "உரகாபரணம்", "துன்பவேர்", "மாயவல்லிருள்", "ஞானச்சுடர் விளக்கு", "திருவடிச் செல்வம்", "பொற்கிரிவல்வில்", "முத்தியாம் வனம்", "சிவானந்தவாரி", "கருணைக்கடல்" என்பன போல வேறு பல உருவகங்களையும் அதிவீரராமர் அமைத்திருக்கின்றார்.

இதுகாறும் ஆய்ந்து வந்த உருவக ஒப்பீட்டினால் திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதியில் வந்த உருவகங்கள் முன்னோர் வழிவழி வந்தனவாய்ச் சிலவும், திருச்சகத்தை அடிஒற்றியனவாய்ச் சிலவும் அமைந்திருக்கக் கண்டோம். சிறப்பாக நோக்கும் போது அஞ்செழுத்தின் புணை, அமுதவாரி, கருணையங்கடல் (கருணைவெள்ளம்) போன்றவை திருச்சகத்திற்கும், பதிற்றுப் பத்தந்தாதிக்கும் உள்ள நெருங்கிய உறவை எடுத்துரைக்கும் சான்றுகளாக அமைந்து உள்ளன.

Phone No : 222 "Tel Add. "JEWELLERY"
PT.N. G. S. T. No: 209126. Post Box. No. 14
LNo. 8/77. Residence Phone No: 622

தரம் மிக்க தங்க நகைகளுக்கு

ஸ்ரீநடராஜ விலாஸ்

ஜுவல்லரி ஹால்

சிதம்பரம்

முகவரி

ச. ரெத்தினசாமி செட்டியார் சன்ஸ்

உரிமையாளர்கள்:

நடராஜ விலாஸ் ஜுவல்லரி ஹால்
26, 27, 28, கடைத்தெரு, சிதம்பரம்
தென்னார்க்காடு மாவட்டம்—608 001

ஆன்மா வேறு - உயிர் வேறு

தொடர்ச்சி

பூசை. சுப்பையாபிள்ளை. எம். ஏ., பி. எட்.,

உள்ளமே ஆன்மா:

ஆல் என்னுஞ் சொல்லோடு மா என்னும் பலவறி சொற் புணர்ந்து, 'மெல்லெழுத் தியையின் னகார மாகும்'' என்னுந் தொல்காப்பிய விதிப்படி ஆன்மா என்று வந்திருக்க இடமுண்டு. ஏனெனில், ஆலமர் செல்வனிடம் திருமறை கேட்டுணரும் உரிமை ஆன்மாவுக்கு உண்டாதலால். அல்லது, ஆ என்பது ஆன் என்று வருவதற்குத் தமிழிலக்கணம் வழிகாட்டுவதால், ஆன் என்பதனோடு மா என்பது புணர்ந்து ஆன்மா என வந்திருக்கவும் இடமுண்டு. ஆனால், சங்ககாலத்தில் ஆன்மா என்னுஞ் சொல் பயின்று வரவில்லை. ஆயினும், சங்க காலத்திலேயே வடபுலத்துப் புறச் சமயங்களில் இந்தச் சொல் பயின்று வந்திருக்க வேண்டும் என்பது, சற்றே பிந்திய நூலான மணிமேகலை வாயிலாக அறியவருகிறது. இங்ஙன மிருந்தும், மணிமேகலைக்குச் சமகாலத்ததாகவோ அல்லது சிறிதே பிந்திய காலத்ததாகவோ எழுந்ததாகக் கருதப்படவல்ல ஞானமிர் தத்தில் இந்தச் சொல் ஆளப்படவில்லை.

தமிழ்ச் சைவத்தின் பன்னிரு திருமுறைகளுள், திருமந்திரத்தில் மட்டுமே சற்றுக் கூடுதலான எண்ணிக்கையில் ஆன்மா காணப்படு கிறது. பிறவற்றுள், எதிலேனும், எங்கேனும் காணப்படுமாயின், மிகமிக அருகியே காணப்படுகிறது. இக்காரணங்களால், ஆன்மா என்பது தமிழ்ச் சொல் அன்று என்றுதான் கொள்ள வேண்டியதா யிருக்கிறது.

ஆன்மா என்பது தமிழ்ச் சொல் அன்று என்பது பெறப்பட்ட தால், அதற்கு நேரான தமிழ்ச்சொல் யாது என்பது அவாய் நிற் கிறது. நேர்ச்சொல்லொன்று தமிழில் இல்லை என்றால், ''தமிழ்ச் சைவம் வடபுலத்துச் சமயங்களுக்கெல்லாம் பிற்பட்டது.'' என்று சொல்வோரது பொய்க்கூற்று உண்மையென்று ஆகிவிடும் அந்தச் சொல் யாது?

மெய்கண்ட பெருமானர், தமது சிவஞானபோதத்தில் 2 ஆஞ் சூத்திரத்து முதலதிகரணத்தில், "ஈண்டு இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன்ருனேயாய் நிற்குமென்றது", என்று மேற்கோள் காட்டி, இதற் குவிளக்கமாகப் பின்வருகிற வெண்பாவில் எடுத்துக்காட்டு அளித்தருளுகிருர்.

"கட்டு முறுப்புங் கரணமுங் கொண்டுள்ள
மிட்டதொரு பேரழைக்க வென்னென்ருங் — கொட்டி
யவனுளமா கில்லா னுளமவனை மாட்டா
தவனுளமா யல்லனுமா மங்கு"

"ஈண்டு இவ்வான்மாக்கள் பலவும்..." என்று மேற்கோளிற் கூறிய ஆன்மாவுக்கு நேரான தமிழ்ச்சொல்லாக, இந்த வெண்பா வில் உள்ளம் என்ற சொல்லினைப் பெருமானர் நான்கிடங்களிற் பெய்தருளுகிருர். சொற் சுருக்கத்துக்கு எடுத்துக்காட்டாகத் திகழுந் தமது நூலில் உள்ளம் என்ற சொல்லை அவர் 38 இடங்களில் ஆளு கிருர். இது பொதுவான நிகழ்வன்று. ஆன்மாவுக்கு நேரான தமிழ்ச்சொல் உள்ளமே என்பதனை நம்மனேர்க்கு அறிவுறுத்துகிற மிகப்பெரிய செய்தி இது. சிந்திப்பார்க்குத் தெளிவுபிறக்கும்.

மேலும், இதே அதிகரணத்தில், "இலாடத்தே சாக்கிரத்தை யெய்திய வுள்ள மிலாடத்தே யைந்தவத்தை யெய்தும்," என்று பெருமானர் கூறுகின்ருர். இங்கே இலாடத்தே ஐந்தவத்தையை எய்துவது யாதெனின், இலாடத்தே சாக்கிரத்தை எய்திய உள்ளமே அது என்று கூறப்படுகிறது. அவரே 4 ஆஞ் சூத்திரத்து 3 ஆம் அதிகரணத்தில், "இனி, இவ்வான்மாச் சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியந் துரியாதீதமாயுள்ள பஞ்சாவத்திதனைய் நிற்கு மென்றது" என்றுங் கூறுகிருர். இங்கே பஞ்சாவத்திதனைய் நிற்பது ஆன்மா என்று கூறப்படுகிறது. இவ்விரண்டு கூற்றுக்களையும் ஒப்புநோக்குமிடத்து ஆன்மாவென்பது உள்ளமே என்பது தெளிவாகிறது.

நாவுக்கரசு நாயனர் தமது திருவாரூர்ப் பழமொழிப்பத்துள்

"என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய்திட்
டென்னையோ ருருவ மாக்கி
யின்பிருத்தி முன்பிருந்த வினைதீர்த்திட்
டென்னுள்ளங் கோயி லாக்கி"

என்று அருளுகிருர். முன்பிருந்த வினை தீரும்போது உடனிகழ்ச்சி யாக மாயையும் திரவே தீர்ந்துவிடும். எஞ்சியிருப்பது ஆணவம்

ஒன்றே. ஆணவத்துள் கோயிலாக்குவதற்கு ஆன்மாவைத்தவிர வேறொன்றும் இல்லை. எனவே, முன்பிருந்த வினைதீர்த்திட்டுக் கோயிலாக்கப்படுகிற உள்ளம் என்பது ஆன்மாவேயன்றோ! "உள்ளம் பெருங்கோயி லூனுடம் பாலயம்" என்னும் திருமந்திரத் தாலும் இக்கருத்தேயன்றோ பெறப்படுகிறது!

இதே பதிகத்துள், "... உருகுவித்தென் உள்ளத்தி னுள்ளிருந்த கள்ளத்தை..." என்கிறார் நாயனார் பெருமகனாகிய திரு ஞானசம்பந்த நாயனாரது முதற்பதிகத்து இரண்டாம் அடிதோறும் வருகின்ற "... என் உள்ளங் கவர்கள்வன்..." என்பதனோடும், பட்டினத்துப்பிள்ளையின் ஒருபாவொருபஃதிலுள்ள,

"... உறைவிட முள்ள மாயினு மறந்து
கறைபட வாங்கே கரந்த கள்ளமும்..."

என்பதனோடும், உமாபதிசிவனார்தம் போற்றிப்பஃறொடையிலுள்ள

"... முந்தியென்ற
னுள்ளமென்று நீங்கா தொளித்திருந்து தோன்றிநின்று
கள்ளமின்று காட்டுங் கழல்போற்றி ......"

என்பதனோடும் ஒப்பிட்டுக் காணும்போது, இங்கெல்லாம் கூறப் படுகிற உள்ளமானது ஆன்மாவைத்தானே குறிக்கிறது.

"எங்ஙனம் ஆன்மாவைக் குறிக்கிறது?" எனிற் கூறுதும்.

"குறிப்பறிந் தேனுட லுயிரது கூடிச்
செறிப்பறிந் தேன்மிகு தேவர்பி ரானை
மதிப்பறி யாதுவந் துள்ளம்பு குந்தான்
கறிப்பறி யாமிகுங் கல்விகற் றேனே".

(திருமந்திரம்: கல்வி)

இதன் பொருள்: தேவர்பிரானை - (கள்ளத்தால் என்னுட் கரந்து நின்ற போது) விண்ணோர் தலைவனை; உடல் (கூடிக்) குறிப்பறிந் தேன் - நான் எனது உடலோடு கூடி அறிய முற்பட்ட காலத்தில் மயங்கி அறிந்தேன்; உயிர்கூடிச் செறிப்பறிந்தேன் - உயிரையும் உடம்போடு கூட்டி அறிய முனைந்தபோது ஐயுற்று அறிந்தேன்; மறிப்பு அறியாது உவந்து உள்ளம் புகுந்தான் - வேற்றுமையின்றித் தனக்கேயுரிய நகைப்புடன் உள்ளத்துள் அவன் புறப்பட்டபோது கறிப்பறியா மிகும் கல்வி கற்றேன் - (முன்னைப் பிறவிகளில் நான் கண்ட துன்பங்களையெல்லாம்) மறக்கடித்து, இன்னும் வருகின்ற பிறப்புக்களை இன்பமே எனக்கொள்ளுமாறு அதற்கு வேண்டிய வற்றையெல்லாம் அவன் உணர்த்த நான் கற்றேன்.

உள்ளத்துட் கரந்து நிற்கின்ற காலமாவது, நான்முகன் முதலானவர்கள் தேவர்பிரானது மலரடிக்கீழிருந்து வழிபடுங்காலம். கந்தபுராணப் பார்ப்பதிபடலம், திருமணப்படலம் ஆகிய இரண்டனுள் இதனைக் காண்க. உள்ளத்துள்ளே தோன்றி நிற்குங்காலமாவது, மாலறியா நான்முகனுங் காணா மலையாக நிற்குங்காலம் அவர்களுக்கு அரியனாகி, அடியார்க்கு எளியனாய் எழுந்தருளுங்காலம். மறை வெளிபாக்கற்பாற்றன்று. ஞானக் குரவர்பாற் கேட்டுத் தெளிக.

நாலாந்திருமுறையில் "பொது" வில், தொண்டனேன் பட்ட தென்னே ..." என்னும் பதிகத்தில், நாவுக்கரசு நாயனார்

"உடம்பெனும் மனைய கத்துள் ளுள்ளமே தகளி யாக
மடம்படும் முணர்நெய் யட்டி யுயிரெனுந் திரிம யக்கி..."

என்கிறார். இதில், "உள்ளமே தகளி யாக" என்று உருவகம் காட்டுகிறார். இந்த உருவகத்தைச் சித்தியார் 4 ஆஞ் சூத்திரம் 29 ஆஞ் செய்யுளில் வருகின்ற,

"அறிவுடல் சிந்தை யான்மா வனைதலா லான்மா வென்ப
ரெறிசுடர் விளக்கி ருக்கு மிடத்தையும் விளக்கென் றாற்போல்"

என்பதனோடு ஒப்பிடும்போது, இங்கே ஆன்மாவும் விளக்கும் உருவகிக்கப்படுவதால் உள்ளமே ஆன்மா என்பது போதரும்.

இனி, இந்தக் கட்டுரையின் தொடக்கத்தில், "உடலினுயிர் போல் அவ்வான்மாக்களேயாய்" என்றதன் மூலமாக ஆன்மா வேறு, உயிர் வேறு என்பதனை உணரக்கூறிய மாதவச் சிவஞான முனிவர், ஆன்மாவுக்குரிய தமிழ்ச் சொல்லாகக் கூறுவது எதனை எனக் கண்டறிவோம்.

சிவஞானபோத மாபாடியத்தில் மூன்றாஞ் சூத்திரத்தில் வருகிற "அறிந்து மறிவதே யாயும் ..." என்ற வெண்பாவுக்கு உரைதருமிடத்தில், "உள்ளமாகிய ஆன்மா என்க" என்றும், "அகம்- உள்ளம், ஆன்மா என்றவாறு" என்றும், மேலும் நான்காஞ் சூத்திரத்து: "மனமாதி யாலுணர்தன் மன்னு புலன்கள் ..." என்னும் வெண்பாவுக்கு உரையில், "உள்ளம் - ஆன்மா" என்றும் உரைப்பதன் வாயிலாக, ஆன்மாவுக்குத் தமிழ்ச்சொல் உள்ளமே என நம்மனோர்க்கு உணர்த்தி, இன்னும் வழக்குரைக்க இடமின்றி முற்றுப் புள்ளி வைக்கிற சிவஞான முனிவரது திருவாக்கே போதுமன்றோ?

நம்மனோர்க்குத் தமிழ்ச் சைவத்தைத் தெளிவிப்பவர்கள், சிவஞான முனிவரையன்றி வேறு யாருளர்?

ஆன்மாவுக்குத் தமிழ்ச்சொல்லைக் கண்டெடுத்த பின்னர், பதி என்ற சொல்லும், பாசம் என்ற சொல்லும் தமிழிலே எச்சொற்களாற் குறிக்கப்படுகின்றன என்னும் அவா எழுவது இயற்கையே. இவை குறித்து இங்கே விரிவஞ்சிச் சுருக்கித் தரப்பட்டுள்ளவற்றைச் சைவமெய்யன்பர்கள் சைவத்திருமறை, திருமுறை மற்றும் புராணங்கள் முதலியவற்றுட் கண்டுணர்க.

திருவாசகத்துள், பிரார்த்தனைப்பத்து, குழைத்தபத்து ஆகியவற்றுள், மாணிக்கவர்சகர், "உலர்ந்து போனே னுடையானே!" என்றும், "உடையாய்! அடியே னுள்ளத்தே யோவா துருக வருளாயே" என்றும், "புறமே கிடந்து புலைநாயேன் புலம்புகின்றே னுடையானே" என்றும், "உடையாய்! நீயே யருளுதியென் றுணர்த்தா தொழிந்தே கழிந்தொ ழிந்தேன்" என்றும், குழைத்தாற் பண்டைக் கொடுவினைநோய் காவா யுடையாய்!" என்றும், "அழகே புரிந்திட் டடிநாயே னரற்றுகின்றே னுடையானே!" என்றும், இவ்வாறு பிறவிடங்களிலும் 'உடையான்' என்ற சொல்லாலேயே பதியை அழைக்கின்றார். பிற நூல்களிலும் பதியை 'உடையான்' என்ற சொல்லே குறிப்பிடுகிறது. இவ்வாறிருக்கத் தமிழ்ப் பற்றைக் காரணங்காட்டி நாமாக வலிந்துமுனைந்து 'இறை' என்ற சொல்லாற் பதியைக் குறிப்பது பெரிய - மிகப் பெரிய - தவறாகும். ஏனெனில், இறைவன் என்ற சொல்லானது அரனைக் குறிப்பதன்றிப் பதியைக் குறிப்பதாகாது. "ஒன்றென மறைகளெல்லா முரைத்திட ..." எனத்தொடங்குகிற சித்தியார் 2 ஆஞ் சூத்திரச் செய்யுளிலிருந்து இது தெளியவரும்.

இனிப் பாசத்தைக் காண்போம். இதனைத் 'தளை' என்று இப்பொழுது கூறுகிறார்கள். தளை என்னுஞ்சொல் ஒருவகையான இழிவுக் குறிப்பினையன்றே உள்ளடக்கி நிற்கிறது? "கால முலக முயிரே யுடம்பே ..." என்று தொல்காப்பிய முனிவனே பாசத்துக்குத் தமிழ்ச்சொல்லைத் தந்திருக்க, நாம் தளை என்ற திப்பியமற்ற சொல்லாற் பாசத்தைக் கூறலாமா? தளை என்பது யாக்கையின் ஒரு காரணக் குறியன்றோ? காரணக்குறி ஆவது எவ்வாறு? தன்னுண்மையாகிய ஆணவமலமொன்றினை மட்டுமே கொண்டிருக்கும் உள்ளமானது (ஆன்மா) படர்வு (வியாபகம்) உடையதாகும். ஏனெனில், இப்போது அதற்கு 'தளை' இல்லை. ஆகவே, இப்போது அஃது 'எங்கே' வேண்டுமானாலும் "போவதற்குத் தகுதியுடையது

இனி, வினையால் மாயையை பெற்றுப் மாயேயமாகிய யாக்கை யொன்றை அஃது எடுத்துக் கொள்ளுமானால், தன்னுண்மையில் அதற்கிருந்த படருந்தன்மை (வியாபகத்தன்மை) ஒழிந்து போய் விடும். உள்ளத்தினது 'படர்வினைக்கெடுத்து உள்ளத்தை ஓரிடத்த தாக்கி (ஏகதேசியாக்கி) அதனைத் தளைந்து நிற்கிற காரணத்தால் யாக்கைக்கே தளை என்ற சொல் பொருந்துவதாகும்.

உலகம் ஒடுங்கும்போது மாயையிற் சென்று ஒடுங்கியும், தோற்றும் போது, அதே மாயையின் கண்ணின்றும் தோற்றியும் தனக்கு என்றுமே அழிவில்லாதது உடம்பு. சிவப்பேற்றின் போது உள்ளமானது உடையானிடம் சென்றுவிடுவதால், பிணம் என்ற பெயர் பெற்று மண்மேலே கிடப்பது யாக்கை உயிர்ப்பு இருந்தால் யாக்கை; உயிர்ப்பு இன்றேற் பிணம். "உடம்பார் அழியின் உயிரார் அழிவர்" என்பதில் உடம்புக்கு ஈருக நிற்கின்ற 'ஆர்' இழிவுக் குறிப்பினைக் காட்டி யாக்கையைக் குறிப்பது. தமிழில் அறங்கரை நாவின் அந்தணர்களது திருவாக்கில் மலர்ந்துவரும் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு குறியீட்டினைக் கொண்டது என் பதை மறந்துவிடக் கூடாது.

எனவே, பதிபசுபாசங்களுக்கான நேர்த் தமிழ்ச்சொற்கள் நிரலே உடையானும், உள்ளமும், உடம்புமே ஆகும். இறை, உயிர், தளை என்பது பிழையாகும்.

உ

'ஸ்ரீ குமரகுருபரர்'

சமய இலக்கியத் திங்களிதழ்

அன்பமை நலத்தீர்,

வணக்கம், தங்கள் சந்தா .... மாதத்தோடு முடிவடைகின்றது. அன்புகூர்ந்து சந்தாத் தொகையனுப்பிப் புதுப்பித்துக் கொள்வதோடு, தொகை அனுப்பும்பொழுது சந்தா எண்ணைக்' குறித்தும், சந்தாஎண் நினைவில்லையெனின் தொடர்சந்தா' என்று எழுதியும் உதவ வேண்டுகிறேன்

நன்றியுடன்,
நிர்வாக ஆசிரியர்,
ஸ்ரீ குமரகுருபரர்
ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்
612504, தஞ்சை மாவட்டம்

ஆண்டுச்சந்தா ரூ. 10/-
ஆயுட் சந்தா ரூ. 125/-

நூல்நிறை

1. திருவைந்தெழுத்து

[வெளியீடு : சூரியனார் கோயில் ஸ்ரீ சிவாக்கிரயோகிகள் ஆதீனத்தின் 6—ஆவது வெளியீடு. பக்கங்கள் 4 + 48. விலை குறிக்கப்பெற வில்லை. ஆக்கியோன் : முனைவர் கு. சுந்தரமூர்த்தி எம். ஏ., பி. எச். டி]

சூரியனார் கோயில் ஸ்ரீ சிவாக்கிர யோகிகள் ஆதீனத்தின் இருபத்தாறுவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ — ல — ஸ்ரீ தெய்வசிகாமணி தேசிக பராமாசாரிய சுவாமிகள் அவர்கள் வடமொழியும், தென்மொழியும் வல்லவர்களாய், ஞான நூல்களில் தெளிவு கண்டவர்களாய், அநேக சீடர்களுக்குச் சமய விசேட தீட்சைகளைச் செய்வித்துப் பூஜா முறைகளைத் தெளிவுற விளக்கி உபதேசம் செய்து வருகிறவர்களாய்த் திகழ்கிறார்கள் என்பது சைவஉலகம் நன்கறியும், மற்றும் குருமகாசந்நிதானம் அவர்கள் சாமான்யர்களும் சைவ சாதனங்களைப் பற்றித் தெளிந்த உணர்வு பெற வேண்டும் என்ற பெருங்கருணையுள்ளம் கொண்டு திருநீறு, உருத்திராக்கம் என்னும் அரிய இரு நூல்களை ஆதீன வெளியீடாக வெளியிட்டு உபகரித் திருக்கிறார்கள். அங்ஙனமே "திருவைந்தெழுத்து" என்னும் நூலையும் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியின் முதல்வராகத்திகழும் முனைவர் கு. சுந்தர மூர்த்தி அவர்களைக் கொண்டு எழுதச் செய்து ஆதீன வெளியீடாக வெளியிட்டு உபகரித்துள்ளார்கள்.

இந்நூலில் மந்திரம் என்னும் சொற்பொருளும் வழக்காறும், திருவைந் தெழுத்தின் சீர்மையும் சிறப்பும், திருவைந் தெழுத்தின் பொருளும் வகையும், அடியவர் வாழ்வில் ஐந்தெழுத்து அருமறை, மெய்கண்ட நூல்களில் திருவைந்தெழுத்து என்னும் ஐந்து கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இறுதியில் ஞான சம்பந்தர் நாவுக்கரசர் சுந்தரர் ஆகிய மூவரும் அருளிச்செய்த திருவைந்தெழுத்துப் பதிகங்கள் குறிப்புரையுடன் சேர்க்கப் பெற்றுள்ளன.

ஐந்து கட்டுரைகளிலும் திருவைந்தெழுத்தைப் பற்றிய பல்வேறு நுட்பங்கள் பல்வே நூல்களின் மேற்கோள்களுடன் தெளிவுபெற விளக்கப் பெற்றுள்ளன. இந்நூலை ஆக்கித்தந்த முனைவர் மு. சுந்தரமூர்த்தி அவர்கள் மிகவும் நுணுகி ஆயந்தறிந்த அளவற்ற செய்திகளை எல்லாம், சிறிய கண்ணாடிக்குள் மிகப்பெரிய வடிவமும் செறிந்தினிது விளங்குவதைப் போல் சுருக்கமாக அரும்பெருங் கருத்துக்களை அடக்கிக் கட்டுரைகளை எழுதி இருப்பது பெரிதும் பாராட்டுக் குரியதாகும்.

இந்நூலை அச்சிடுதற்கான உதவியைப் புரிந்த ஆர்வலர் நெல்லை திருமிகு S. சிதம்பரநாத கல்யாணி அவர்களும் பாராட்டுக் குரியவராவர்.

இந்நூல் சைவ சமய சாத்திர ஆய்வு செய்வார்க்குப் பேருதவி புரியும் துணை நூலாக விளங்குகிறது. சைவ சமயத்தார் அனைவர்க்கும் திருவைந்தெழுத்தின் நுட்பங்களை அறிதற்குப் பெரியதோர் வாய்ப்பாக அமைந்திருக்கிறது.

— தா. ம. வெள்ளைவாரணம்.

2. ஸ்ரீகணேசபஞ்சரத்தினம் ஸ்ரீ கணேசபுஜங்கம்

[ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியவை, பக்கங்கள் 10, விலை 0–75 காசுகள் பதிப்பித்தோர் — கிடைக்குமிடம் : ஸ்ரீ காமகோடி ஆய்வு மையம், ஆஸ்ரமம் 46. ஏ. கல்யாணராமன் தெரு, கும்பகோணம் — 612001]

இவ்விரு தோத்திரங்களும் தேவநாகரி எழுத்துக்களிலும், தமிழ் எழுத்துக்களிலும் பதிக்கப் பெற்றுள்ளன. அத்துடன் தமிழில் பொழிப்புரை தரப்பெற்றுள்ளது மிகவும் பயனுள்ளதாகும். ஸ்ரீ கணேசபஞ்சரத்தினத்திற் காணும் பலஸ்ருதியும் பொழிப்புரையும் வருமாறு :

" மஹாகணேச பஞ்சரத்நம் ஆதரேண யோங்வஹம்
ப்ரஜல்பதி ப்ரபாதகே ஹ்ருதி ஸ்மரந் கணேச்வரம் ।
அரோகதாம் அதோஷதாம்ஸுஸாஹிதீம் ஸுபுத்ரதாம்
ஸமாஹிதாயு ரஷ்டபூதிம் அப்யுபைதி ஸோசிராத் ॥

மகாகணபதி பஞ்சரத்நம் என்னும் இந்த ஸ்தோத்திரத்தை எவர் ஒவ்வொரு நாளும் விடியற்காலையில் மகாகணபதியை இதயத்தில் தியானித்துக் கொண்டு பாராயணம் செய்கிறார்களோ அவர்கள் சீக்கிரமாகவே எல்லா ரோகங்களிலிருந்தும் எல்லா தோஷங்களிலிருந்தும் விடுபடுகிறார்கள். அவர்கள் நல்ல

கவிதா சக்தியையும், உத்தம புத்திரர்களையும், நீண்ட ஆயுளையும், அஷ்டஐசுவர்யங்களையும் அடைவார்கள்.

ஸ்ரீ கணேசபுஜங்கத்திற் காணப்பெறும் பலஸ்ருதியும் பொழிப்புரையும் வருமாறு:

" இமம் ஸுஸ்தவம் ப்ராத ருத்தாய பக்த்யா
படேத் யஸ்து மர்த்யோ லபேத் ஸர்வகாமான் |
கணேச ப்ரஸாதேன ஸித்யந்தி வாசோ
கணேசே விபௌ துர்லபம் கிம் ப்ரஸன்னே ||

எந்த மனிதன் அழகிய இந்த ஸ்தோத்திரத்தைக் காலையில் பக்தியுடன் படிக்கிறானோ அவனின் எல்லா விருப்பங்களும் நிறைவேறும், ஸ்ரீ கணேசரின் அருளால் அவனது சொல் பயனளிக்கக் கூடியதாகும். ஸர்வவியாபியான மகாகணபதி ஸந்தோஷமடைந்தால் எதைத்தான் அடையமுடியாது. எல்லாம் அடையலாம் என்றபடி.

— ம. வே. பசுபதி.

3. காதலி கொண்ட கவலை

[ஆசிரியர்: புலவர். புருடோத்தமன். பக்கங்கள் 84. விலை 7-50. கிடைக்குமிடம்: திலகம் பதிப்பகம். பெருமாள் கோயில் தெரு, அவலூர்ப் பேட்டை, தெ. ஆ. மாவட்டம்]

இலக்கியக் கட்டுரைகள் பதினொன்று கொண்ட நூல். சங்க இலக்கிய மேற்கோள்கள் சரளமாக வரக்கட்டுரைகள் முறுகியலின்பம் கொழிக்க அமைந்துள்ளன. அனைத்தும் அகப்பொருட் கட்டுரைகள் என்றும் எண்ண வேண்டியதில்லை. குமரகுருபரன் தமிழணங்கு ஆகியவற்றில் வெளிவந்த கட்டுரைகள் இவை இலக்கியச் சுவைஞர்க்கு நல்விருந்து.

முதற்கட்டுரையின் பெயரை நூலுக்குத் தலைப்பாக இடும் (உ—ம்: இலக்கிய ஆராய்ச்சி - டாக்டர். மு. வ) உத்தியை இவ்வாசிரியர் பின்பற்றி நூலுக்கு இத்தலைப்பு இட்டுள்ளார். இறைவணக்கம், நூறாண்டு வாழலாம் சொல்லித் தெரிவதில்லை என்னும் தலைப்புக்களில் ஒன்றை முதலில் அமைத்திருக்கலாம். தரமான இலக்கியக் கட்டுரைகளுக்கு மலிவான தலைப்பு வேண்டுமா?

— ம. வே. பசுபதி.

உ

சிவ சிவ

திருவண்ணாமலையில்

திருக்கார்த்திகைப் பெருவிழா
திருமுறை இன்னிசை விழா

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர்

"கயிலைமாமுனிவர்" ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின்

அருளாணையின் வண்ணம் நடத்தப்பெறுவது

25 - 11 - 87 முதல் 4 - 12 - 87 முடிய

பிரபவ ஆண்டு கார்த்திகைத் திங்கள் 9ம் தேதி முதல் 18ம் தேதி முடிய திருவண்ணாமலையில் திருக்கார்த்திகைப் பெருவிழாவில் நாடோறும் திருமுறைப் பாராயணம் நடைபெறும்.

1. இன்னிசைப் பண்மணிகள்
   திரு. டி. எம். விசுவலிங்கம் சபாபதி சகோதரர்கள்
   திருவாவடுதுறை.
2, தேவார மணி
   திரு. எஸ் திருநாவுக்கரசு தேசிகர் திருவண்ணாமலை
3. தேவார மணி
   திரு. M. முத்தையா தேசிகர்.
   அருணாசலேஸ்வரர் தேவஸ்தானம் திருவண்ணாமலை.
4. திருவண்ணாமலை திரு. M· சிவகுமார் மிருதங்கம்.

அருளாணையின்வண்ணம்

தி. ராசமாணிக்கம். B.A. B.L.,
உதவி ஆணையர் / நிர்வாக அதிகாரி.
(கூடுதல் பொறுப்பு)
பு. கு பெருமாள் செட்டியார், தக்கார்.

R.V. சுப்பிரமனியம்
மேலாளர்,
ஸ்ரீ காசிமடம்,
திருப்பனந்தாள்.

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

(மாதப் பத்திரிகை)

பரபரப்பும் ஆரவாரங்களும் நிறைந்த தற்காலச் சூழ்நிலையில், மக்களுக்கு மனச்சாந்தியைத் தரும் அருமருந்தாக இந்தப் பத்திரிகை விளங்குகிறது.

தற்கால மக்களின் ஆன்மிகமறுமலர்ச்சிக்கு ஏற்ற வகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் ஒலிக்கிறது.

உங்கள் உள்ளம் உயர, நீங்கள் மேன்மையுற, அவசியம் படிக்க வேண்டிய பத்திரிகை இது.

உள்ளத்தைப் பண்படுத்தும் இந்து மதத்தின் சிறந்த கருத்துக்கள் உங்கள் குடும்பத்தினருக்கு எப்போதும் கிடைக்கச் செய்ய ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகை ஆயுள் சந்தாதாரராகச் சேருங்கள்.

சந்தா விவரம்

வருடச் சந்தா	ரூ. 22
ஆயுள் சந்தா	ரூ. 250
தனிப் பிரதி	ரூ. 2

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயம் தொலைபேசி

ஸ்ரீராமகிருஷ்ண மடம் 71959

மயிலாப்பூர் : சென்னை600 004. 71231

ஆலயபூஜைப் படிக்காசு நிதி

நன்கொடை அளித்த அன்பர்கள் விபரம்

திரு/திருமதி	முன் இருப்பு	ரூ 27032—00
குடந்தை துர்க்காகுடில் அப்பு		5—00
உக்கரை கைலாசம்		5—00
பெங்களூர் K. V. லோகநாதன்		13—00
பொள்ளாச்சி B. செந்தில் வேல்		10—00
வெள்ளகோவில் R C சாமிநாதன் செட்டியார்		5—00
	ஆக	ரூ 27070—00

தலச்சங்காடு ஸ்ரீ சங்காரண்யேஸ்வரர் ஆலயச் செலவு	ரூ 90—00
பாணுதுறை ஸ்ரீ பாணபுரீஸ்வரர் ஆலயச் செலவு	75—00
திருந்து தேவன்குடி கற்கடேஸ்வரர் ஆலயச் செலவு	162—25
சேங்கனூர் ஸ்ரீ சத்தியகிரீஸ்வரர் ஆலயச் செலவு	70—50
திருவலம்புரம் வலம்புரிநாதர் ஆலயச் செலவு	100—00
ஆக	ரூ 497—75

இதமான வாழ்வுக்கு எளியவழிகள்

1 கண் நோய் வராமல் தடுக்க

10 கிராம் அளவு படிக்காரம் எடுத்துப் பொறித்துத் தூள் செய்து 4 அவுன்ஸ் சுத்தமான பன்னீரில் கரைத்துத் தெளிந்தபின் எடுத்துத் தினம் ஒருவேளை விடவும். உணவுடன் மஞ்சள் தூள் சேர்ப்பது நல்லது.

2 கண் புருவத்தில் அரிப்பதற்கு

பொடுதலைக் கீரையை இடித்துச் சாறு எடுத்துத் தினம் கண் புருவத்தில் தடவி வரக் குணமாகும்.

Dr. N. சடையப்பன் S. M. P.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய

பண்டார மும்மணிக்கோவை

மா. ஆண்டாள், ஆய்வு முனைவர்.

சிறப்புமிகு ஸ்ரீ வைகுண்டத்திற்கு வடபாலில் அமைந்த ஸ்ரீ கைலாசமென்ற பகுதியில் சிவமணங்கமழும் சைவ வேளாளர்குலத்தில் சண்முகசிகாமணிக் கவிராயருக்கும், சிவகாமசுந்தரி அம்மையாருக்கும் திருமகனாராக உதித்தருளியவர் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆவர்.

பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த குமரகுருபரர் அருளிச்செய்த நூல்கள் பதினான்காகும். அவற்றில் ஒன்று பண்டார மும்மணிக்கோவை என்பது. பண்டாரம் என்னும்சொல்பொதுவாகப் பொருள் வைப்பிடத்தைக் குறிக்கும். ஈண்டு குருநாதர் தம் சீடருக்குத் தரவல்ல அருள் வைப்பிடத்தைக் குறிக்கின்றது. அருள்வைப்பிடமாக விளங்குபவர் குரு மாசிலாமணி சுவாமிகள் ஆவார்.

''மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே'' என்பது ஆளுடை அடிகள் திருவாக்காகும்.

பண்டர், ஆகரம் என்னும் இரண்டு சொற்கள் புணர்ந்து 'பண்டாகரம்' என வடமொழி விதிப்படி நின்று 'பண்டாரம்' எனமருவியதால் மெய்ஞ்ஞானச் செல்வத்திற்கிடம் என்ப் பொருள் தந்து சிவஞான சிகாமணிகளை உணர்த்தி வருகின்றது.

'மும்மணிக்கோவை' என்பது மூவேறு மணிகளைக்கோத்த மாலையென்றாகி உவமவாகுபெயராய், ஆசிரியப்பா, வெண்பா, கலித்துறை என்னும் மூவேறு பாக்களை அந்தாதியாகத் தொடுத்த பாமாலையை உணர்த்தும்.

வெள்ளையும் அகவலும் நேரிசை ஆகக்
கலித்துறை வர அந்தாதி ஆகி
முறைமையின் இயல்வது மும்மணிக்கோவை - ஆகும்.

இந்நூல் இவ்இலக்கணத்திற்கேற்ப அந்தாதியாகப் 'பூமலி' என்று தொடங்கும் பாடல் முதலாகப் 'பூண்டவரே' என்ற பாடல் வரையில் முப்பது பாடல்களும் நூற்கருத்தோடு பெரிதும் தொடர்புடைய வகையில் ஏழுபாடல்களும் ஆக முப்பத்தேழு பாடல்களைக் கொண்டுள்ளது.

இப்பண்டார மும்மணிக்கோவை தருமை ஆதீன ஞானபீடத்தில் நான்காவது குருமூர்த்திகளாக விளங்கிய ஸ்ரீ மாசிலாமணி தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் மீது பாடப்பெற்ற குருவழிபாட்டு நூலாகும்.

இதன்கண் ஆசிரியர் தம் குருவின் திருப்பெயர்ச் சிறப்புகளைப் பின்வருமாறு எடுத்துரைத்து விளக்கியுள்ளார்கள்.

ஒப்புயர்வற்ற உயர்மணி:

'மாசிலாமணி' என்ற சொல்லுக்கு ஆசிரியர் பலகோணத்தில் நின்று விளக்கம் தருவது நல்லதொரு சொற்சிலம்பமாகத் திகழ்கின்றது. வெறும் சொற்சிலம்ப விளையாட்டாக மட்டுமின்றிப் பொருத்தமுடைய, பொருள்பொதிந்த, உண்மைகளாக நின்று குருவின் சிறப்பைக் குன்றின்மேலிட்ட விளக்காகத் திகழச்செய்கின்றது.

மாசிலாமணி என்பது குற்றமில்லாததும், நன்கு கழுவப்பெற்றதுமான மணி ஆகும். அனைவராலும் விரும்பி முடியிலணியப்படுவது சூளாமணி ஆகும். இதற்கேற்ப "எண்டிசைக்கும் சூளாமணி மாசிலாமணி" என்றுரைத்துள்ளார்கள்.

மணி, மந்திரம், ஔடதம் என்னும் மூவகை உபாயத்தாலும் தீராதபிறவிநோய், மாசிலாமணியால் தீரும் என்றியம்பியுள்ளார்கள். ஞானமாகிய பெண்ணுக்கு சைவமாகிய அரிய அணிகளில் நடுநாயகமாக விளங்கும் மாசிலாமணி என்றருளிக் கழுத்திடத்துள்ள களங்கம் நீங்கிய இறைவனே குரு மாசிலாமணியாகத் தோன்றியுள்ளார் என்றியம்பியுள்ளார்கள். மணி இருளை நீக்கி ஒளி தருவதைப்போல மாசிலாமணி பாசமாகிய இருளைப் போக்கும் என்றுரைத்துள்ளார்கள். உலகில் உள்ள பிறமணிகள் தம் ஒளிச்சிறப்பால் பிறவற்றைத் தம்முள் அடக்கி நிற்கும்; ஆனால் பிறவற்றுள் தாம் அடங்கா. குரு மாசிலாமணி சிவபோதத்தில் நிலைபெற நின்று அடிகளைத் தன்பால் அடக்கியும், அடிகள் ஆன்மபோதத்தால் தலையெடுத்து நிற்குங்கால் அவருக்குள் மறைந்தும் நிற்றலால் இதற்கு ஒத்த நன்மணியை எங்கும் காணேன் என்கிறார். மேலும் உலகிலுள்ள மணிகளைப் பெறுவதற்கு

முயற்சியும் வருத்தமும் கொள்ளவேண்டும். குரு மாசிலாமணியைக் கருவிகரணங்களை அடக்கிச் சும்மா இருந்தே பெறலாம் என்பதை

"எம்மூர் உயிராம் எழின்மாசி லாமணியை
அம்மா பெறுதற் கரிதன்றே — சும்மா
இருந்தாரே பெற்ருர் மற்றெவ்வுலகில் யாரே
வருந்தாது பெற்ருர் மணி.

என்ற பாடலில் இடம்பெறச் செய்துள்ளார்கள்.

மதயானையை வணங்கச் செய்யலாம், கரடி புலிகளின் வாயைக் கட்டலாம், சிங்க முதுகின்மேல் ஏறியிருந்து செலுத்தலாம், படம் எடுக்கும் பாம்பைக் கையிற்பிடித்து ஆட்டலாம், உலோகங்களைப் பொன்னுக்கலாம், ஒருவரும் காணுமல் உலகத்துத் திரியலாம், தேவரையும் ஏவல் கொள்ளலாம், என்றும் இளமையோடு இருக்கலாம், இங்ஙனம் எத்தனையோ சித்துக்களைச் செய்தல் எளிதாகும்

ஆனல் சும்மா இருத்தல் அரிதினும் அரிதாகும். ஆயினும் இங்கோ ஐம்புலக்களிறுகளை அடக்கி ஞானநிலையில் நின்ற குமரகுருபர சுவாமிகளுக்குச்சும்மா இருத்தல் மிக எளிதாகப்படப் பிறமணிகளைப் பெறுவதற்கு மேற்கொள்ளும் முயற்சியும் வருத்தமும் இன்றிக் குரு மாசிலாமணியைச் சும்மா இருந்தாரே எளிதில் பெறுவர் என்று நயம்படக் கூறியுள்ளார். உலகின் மணிகள் அம்மணிகளைப் பெற்ருர்க்கு உரிமைப்பொருளாக விளங்கும். அவை பெற்றவர்களை ஆள்வதில்லை. குரு மாசிலாமணியோ

'கண்டவுடன்
பணிகொண்டு தொண்டுங்கொண்டு ஆளும்' என்கிருர்.

தனது இரும்பு மனத்தைக் குழைத்துத் தன்வசமாக இழுத்துத் தன்னேடு நிலைபெறச் செய்வதால் காந்தமாகிய மணி என்கிருர். கடல் பெற்ற சிந்தாமணி நினைத்தவற்றை நல்கும்; குரு மாசிலாமணியோ நினைப்புக்கும் எட்டாத சிவஞானப் பேரின்பத்தை நல்கும் என்கிருர். உயிரும், உடலும், உடைமையெல்லாமுங் கொடுத்துப் பெறும் குரு மாசிலாமணி என்று தம் குருவின் உயர்தனிச் சிறப்பை உலகிற்கு உணர்த்தியுள்ளார். இத்தகு பெருமைபொருந்திய குருவைச் சிவனாகவே கண்ட ஆசிரியர்.

சிந்தை உருகிச் சிவனே குரு எனல்:

'ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாற்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ!' என்னும் மணிவாசகர் கருத்துக்கிணங்க ஊர் பேர் இல்லாற்கு 'ஆரூரே' ஊர் என்றும் 'அருள்மாசிலாமணி' என்பதே பேர் என்றும் உரைத்துக் குருவை இறைவனின் தோற்றம் என்று தெளிவுபடுத்துகிறார்.

தலையில் விளங்கும் மாசுடை மதியைத் தாங்காமல் சிறந்த சாத்திர அறிவைத் தாங்கியும், மானை [உமையை] இடப்பக்கத்தில் கொள்ளாமல் மானிடப் பிறப்பாகிய கோலம் கொண்டும் என்பாகிய அணியைப் பூணாமல் என்பணி பூண்டும், பாரிடம் சூழப்பெறாமல் தன்னில் தோன்றியும் விளக்கும் குரு என்கிறார்.

'தலைப்படு கலைமதி தாங்காது ஆங்குஅத்
தலைப்படு கலைமதி தாங்கி நிலைப்படு
மானிடனைய வடிவு கொண்டருளாது
மானிடனைய வடிவு கொண் டருளி
எற்பணி பூணா தெற்பணி பூண்டு
பாரிடஞ் சூழாது பாரிடஞ் சூழ்தர
ஆரு ரமர்ந்த ஞானசம்பந்த'

என நயம்பட விளக்கியுள்ளார்கள். குரு பரம்பரையினர் யாவரையும் ஒருவராகவே கொள்ளும் மரபில் அடிகள் தம் ஆசிரியரைக் கமலை ஞானப்பிரகாசராகவும், தருமை ஞானசம்பந்தராகவும் பாராட்டி இந்நூலுள் பல இடங்களில் கூறியுள்ளார்கள் அதன்படி இங்கு ஞானசம்பந்தர் என்றியம்பியுள்ளார்கள்.

குரு மாசிலாமணி தேசிகர் அங்கையற்கண்ணி பங்குறையும் சொக்கநாதரை வழிபடுபவராவார். அதனால் குரு இறைவனின் வேறானவர் என்ற எண்ணம் எழுவது இயற்கையன்றோ! அதற்கும் ஆசிரியர் அமைதிகண்டுள்ளார். திருவிடைமருதூர் இறைவன் உமையம்மைக்கு வழிபாட்டு முறைகளை அறிவித்தற் பொருட்டுத் தன்னைத்தானே வழிபட்டுக் கொண்டார். அதுபோல உருத்திர கணங்கள் வழிபாட்டு முறைகளைத் தெரிந்து கொள்தற்காக குரு மாசிலாமணியும் மீனாட்சி சொக்கநாதரை வழிபட்டுத் தன்னைத் தானே வழிபட்டுக்கொண்டார் என்று விளக்கிச் சிவனே குரு என வலியுறுத்தியுள்ளார்.

குருவிடம் வேண்டிக்கொண்டது;

நம் உடம்பிலுள்ள யானைகள் ஐந்தாகும். அவை பெண் அல்ல ஆண். அதனால்தான் அவற்றைப் பெரியோர்கள் களிறு என்றே குறித்தனர். அக்களிறுகள்தாம் யாவை? அவை ஐப்புலன்களாகும். இயற்கையில் களிறுகளால் காடுகள் தோன்ற. ஆனால் இப்புலக் களிறுகளால் பிறவிக்காடுகள் தோன்றுகின்றன. இவ்வாறு பிறந்து பிறந்து இறந்து இறந்து உழலுமாறு செய்யும் ஐம்புலக்களிற்றை ஒழித்து முக்தி நாட்டிற்கு ஏக ஓர்ஞானவாரணம் அருளுமாறு அடிகள் தம் குருவிடம் வேண்டுகின்றார்.

''முத்திநாடு எய்த ஓர் ஞானவாரணம் நல்குதி'' இங்கு ஞான வாரணம் என்பது ஞானோபதேசம் ஆகும்.

உலகில் ஒருவர் கொடுத்தலும் ஒருவர் கொள்ளுதலும் என்றும் உள்ள வழக்கமாகும். கொடுத்தலும் வாங்குதலும் உள்ளதால் தான் உலகம் இயங்குகின்றது. இக்கொடுக்கல் வாங்கலுக்கு உரிய பொருள் இற்றென்னும் வரையறை இல்லை. இத்தன்மையதான உலகத்தில் ஆசிரியர் மானிட வடிவைக் கொடுத்து ஞானவடிவை அருளுமாறு வேண்டுகிறார்.

"என்வடிவம் நின்வடிவாக் கொண்டாய்
எளியேற்கு உன்றன் வடிவம் நல்கத்தகும்''

என்று தமக்குக் கதிஅருளுதல் கடன் என வேண்டுகின்றார் சம்பந்தப் பெயர் தரித்தமையால் நம்மைச் சம்பந்தம் செயத்தகும் என்று தம்மை மணந்து ஆட்கொள்ள வேண்டுகின்றார்.

மாணிக்கவாசகர் தம் திருவாயினின்றும் வெளிப்பட்ட திருவாசகங்களை நோக்கின், அவர் தம்மை நாயினுமிழிந்தவராகக் கருதிய உண்மை விளங்கும். 'நாயிற் கடையாய்க் கிடந்த அடியேன்' என்பது முதற்கண் காணக்கிடப்பது.

''கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்'' என்பது திருவாசகம்.

"பாழ்த்த பிறப்பறுத் திடுவான் யானும் உன்னைப் பரவுவனே'' என்றார் ஆளுடை அடிகள்.

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்

மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின் கீழிருக்க என்றார்.

காரைக்காலம்மையார்,

இப்பெரியோர்களின் வேண்டுதல்களை ஒக்கும் வண்ணம்' குமர குருபரர் சுவாமிகளும் பிறவாதிருக்க வேண்டும் என வேண்டுகின்றார் கள் அஃது இயலாதெனின் தாம் வேண்டும் பிறப்பு இன்னதென்று குறிப்பிடுகின்றார். இந்திரனாகவோ, பிரமனாகவோ, திருமாலாகவோ பிறத்தலை அடிகள் விரும்பவில்லை. காரணம் அவை ஆரா இன்பம் உடையன என்றாலும் வாராவல்வினை வருவிக்கும் என்று கூறுகின் றார். எனவே குருவின் அடித்தொண்டர்கள் அமுது உண்டு தெருவில் எறிந்த எச்சில் இலையை உண்டுவாழும் நாயாகப் பிறக்கவேண்டும் என்றும், குருவின் அருளை மறவாது இருக்க வேண்டும் என்றும் வேண்டுகின்றார்கள்.

"பிறவா நன்னெறி பெறப்புரி வதுவே
யங்கது புரிதற் கரிதெனி னிங்கொரு
சனனம்யான் வேண்டுவ தினிதரு ளெனக்கே அதுவே
... ... வழுத்திநின்
பொன்னடித் துணைசேர் நின்னடித் தொண்டர்
திருவமு தார்ந்து தெருக்கடை யெறிந்த
பரிகல மாந்தியிப் பவக்கட லுழக்கும்
வரனுடை ஞமலி யாகிநின்
னருளையு மயரா தவதரிப் பதுவே.

என வேண்டும் அடிகளின் வேண்டுதல் கற்போர் மனத்தினைக் கனிவிப்பதாகும். இத்தகு குருவின் உண்மைப் புகழுரைக்கும் நூலில் இலக்கிய நயங்களும் ஏற்றமுடன் இடம்பெற்றுள்ளன.

கற்பனை நயம்

குமரகுருபர முனிவர் உருவகஞ் செய்யுந்திறத்தில் ஞானமிர் தத்தின் ஆசிரியர்க்கு நிகரான சிறப்புடையவர் ஆவார். அகப் பொருள் புறப்பொருள் முதலியவற்றில் உருவகஞ் செய்தல் புலவர்க்கு எளிது. ஆயின் மெய்ஞானப் பொருளில் உருவகஞ் செய்தல் அரிதினும் அரிதாகும். இவ்வருஞ் செயல் புரிந்தவரை விரல்விட்டெண்ணி விடலாம். இந்நூலில் அப்படிப்பட்டதோர் உருவகம் அமைந்துள்ளது.

மும்மலங்களுள் ஒன்றான மாயையை ஒரு நாடாகவும் பதியை ஒருகரையாகவும், புவனங்களை அதன் உட்பகுதியாகவும், உடற் தோற்றத்திற்குரிய இடம் நால்வகையையும் கண்ணறுகளாகவு; எழுபிறப்பின் பேதங்களைச் செய்களாகவும், உயிர்களைப் பயிர்களாகவும், ஊழ்வினையை அப்பயிர்களுக்குரிய நீராகவும் அந்நீரை வெளிக்கொணரும். மதகுகள் மூன்றென்றும் அருளியுள்ளார்கள் அதை உடன் உடன் திறக்கும் ஆசையே நீர் செல்லும் கால்வாய் என்றும் இன்பதுன்ப நுகர்ச்சி அப்புதுநீர்ப் போகம் என்றும் மடைகளே ஐம்பொறிகள் என்றும் கூறிப் பருவம் "வரல்முறை கட்டி, மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம்களை என்னும் அவை ஆறு ஏரிகள் என்றும், அத்தகைய வயலில் விளைவன விளைய விளைவனவற்றை அறுத்துக் களஞ்செய்யும் உழவனே தருமை குரு மாசிலாமணி என்றும் கூறுகின்றார்கள் இத்தகு குருவின் திருமுன் நின்று ஓர் சொற்பொழிவையே ஆற்றுகிறார் ஆசிரியர் குமரகுருபரர் அவர்கள்.

"குடிலை யென்னும் தடவய லுப்பண்
அருள் வித்திட்டு கருணை நீர்பாய்ச்சி
வேதமென்னும் பாதவம் வளர்த்தனை
பாதவ மதனிற் படுபயன் பலவேறு அவற்றுள்
இலை கொண்டு வந்தனர் பலரே இலையொரீ இத்
தளிர் கொண்டு வந்தனர் பலரே தளிரொரீ இ
அரும்பொடு மலர் பிஞ்சருங்காய் என்றிவை
விரும்பினர் கொண்டு கொண்டு வந்தனர் பலரே
அவ்வாறு றுப்பு மிவ்வாறு பயப்ப
ஓரும் வேதாந்தத் துச்சியிற் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித்தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே யான் அவர்
நன்னிலை பெறுதற் கன்னிய னுயினும்
அன்னவர் கமலப் பொன்னடி விளக்கியத்
தீம்புன லமுத மார்ந்தன னதனல்
வேம்பெனக் கொண்டனன் விண்ணவ ரமுதே"

இங்கு இலை, தளிர், அரும்பு, மலர், பிஞ்சு, காய் என்றவாறு அறுவகைச் சமயமும் சுட்டப்பட்டுள்ளன, வேதசாரமாகிய சைவ சித்

தாந்தம் உச்சியிற் பழுத்த தீஞ்சுவைப் பழந்தின் சாரமாகக் குறிக்கப்பட்டுள்ளது. இப்பண்டார மும்மணிக்கோவையில் இச் செய்யுளைப் போற்றாத புலவர்கள் இல்லை. இவ்வகவலை இந்நூலில் உள்ளதென அறியாமலேயே அறிந்திருந்தோர் பலர் இதனை மேற் கோளாகக் காட்டியோர் தொகை ஏராளம் ஏராளம். அத்தகு சிறப்பும் நயமும் உயர்பொருளும் உடையது இப்பாடலாகும்'

இந்நூல் சிவசாயுச்சியம் எய்துதற்குரிய நெறியாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கனுருவாகத் திகழ்கிறது இந்நூல் இயற்றியதைச் சரியையாகவும், குருவுக்குச் சாற்றியதைக் கிரியையாகவும், குரு இந்நூலைத் தெரிந்த போது அருளியதை யோகமாகவும், குரு வழங்கியதை ஞானமாகவும் கொள்வர்.

ஆசிரியர் இந்நூலில் தம் குருவின் பெருமையைப் பலபட எடுத்துரைத்துள்ளார்கள். மனம், வாக்கு, காயம் என்ற மூன்றாலும் குருவின் புகழை நினைத்தும், சொல்லியும், இறைஞ்சியும் இன்புற்ற தால் அவை அவகரணங்களாக இல்லாமல் சிவகரணங்களாகத் திரிந்தன என்கிறார், குருவின் ஊரைச் சேர்ந்ததால் சீவன் என்னும் பெயராக இருந்த நிலை ஒரு மாத்திரை குறைந்து சிவன் என்று ஆனதாகக் காட்டுகின்றார்.

"தொடுத்த தமிழ் மும்மணிக்கோவை நித்தம் துதிக்கவல்லார்
எடுத்த சனனத்தில் எய்தாத பேரின்பம் எய்துவரே"

என்பது இந்நூற்பயனாகும். இந்நூல் உயரிய சாத்திர நூலாகவும், குருவே சிவமாதலின் அரிய தோத்திர நூலாகவும், முருகியலின்பம் தருதலின் சிறந்த இலக்கியமாகவும் திகழ்கின்றது. குருபக்தி, அந்தமில் இன்பம், அழியா வீடளித்தல், இம்மைப் பேரின்பம் முதலியவற்றை இந்நூல் நல்கும் சிறப்புடையதாகும்.

ஸ்ரீ குமரகுருபரர் அருள்வாக்கு

மணியை விலைக்கு வாங்குபவர் பொன்னைக் கொடுத்து வாங்கு வாரேயன்றி அப்பொன்னோடு தமது உடலையும் உயிரையும் கொடுத்து வாங்குவதில்லை. எமது குருநாதரான மணியைக் கொள்பவர் தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் அற்பணித்து வாங்குவார்கள்.

பண்டார மும்மணிக்கோவை 30

நு. வி ; ஞெலிகோல் - தீக்கடை கோல். கஞலிய - விரவிய. பூட்சி என வருவனவற்றுள் முன்னையது உடலையும், பின்னையது இயல்பையும் குறிக்கும். வாள் - ஒளி.

பதியுண்மை

57 பூபூத ராதி ஓவற உஞற்றும்
ஒருவனை யுடைத்துப் பொருவிரி காரியம்
ஆதலிற் கடம்போல் என்னில் கோதின்று
இருங்கடம் அதனேடு இயற்றிய ஒருவனை
ஒருங்குடன் கண்டோன் ஒழிந்து இகல்இரிகடம்
கண்டால் இவையும் அவன்எனக் கொண்டாங்கு
உண்டோ உலகம் உஞற்றுட னெருவற்
கண்டுமற் றதூஉம் உண்டுஇவண் எனவெனில்
கண்டதின் மானம் உனக்குக் கொண்டல்கொள்
கிரிவளர் கழைஞெலி தூம மதனின்
எரிவளர் அட்டில் புகைஅய லெனவுணர்ந்து
ஒட்டினை பிறங்கல் ஒள்ளழல் ஒட்டியது
என்னை விசேட சமனியத் தியாதிற்
பன்னெனில் விசேடம் என்னின் அன்னே
காட்சியது அல்துஇலைச் சமனியம் மாட்சியது.
என்றேல் செயலொடு செய்வோற் கண்டோன்
மன்ற மாண்வினை காணின் என்ருங்கு
ஓதுவன் ஒருவன் தீதுகு செயல்என்று
அற்றேல் மாக மாதிய வினையாகு
எற்றேல் பாகம் இயைதலின் கடம்அற்று
இன்னும் ஒண்குணம் மன்னலிற் புலிபோல்
ஆதிய வழியும் அழிபவை செயல்ஒன்று
ஒதுரு அஃதுந் தீதறு செயலே.

இது பதியை யறியும் உபாயம் அருளிச் செய்யவேண்டும் என்று விண்ணப்பஞ் செய்த சீடனுக்குக் கேவலான்னுவய அனுமானப் பிரமாணத்தால் பதியுண்மை கூறியது.

இ - ள் பிருதிவி முதலிய தத்துவ சமூகங்களும் மலை முதலிய பொருள்களுமாகிய பிரபஞ்சம் ஒழியாதே செய்வான் ஒருவனை யுடைத்து இது பிரதிஞ்ஞை. அதற்கு ஏது என்எனில் உவமை யில்லாத காரியமாய் இருத்தலால் இஃது ஏது. என்போல வென்னில் கடம்போல இது திட்டாந்தம். இவை மூன்றும் கேவலான்னுவய அனுமானம். இங்ஙனம் கூறியதற்கு இசைந்தால் குற்றம் இன்றும். பெரியகடமான அதனையும் செய்வானொருவனை யும் ஓரிடத்தே சேரக் கண்டவன் ஒருவன் இவ்விடம் ஒழிந்து வேறிடத்திலே உவமனில்லாத பல கடங்களைக் கண்டால், இவையும் அங்ஙனம் இயற்றப்பட்டன என்றே நிச்சயித்தாற்போல வேறோர் உலகத்தைச் செய்வான் ஒருவனை உடன்கண்டு இவ்வுலகமும் அங்ஙனம் போல ஒருவனலே செய்யப்பட்டுள்ளது என்று நிச்சயித்தற் குண்டோ என்று விண்ணப்பம் செய்ய என்று அங்ஙனம் கூறுவா யேல் அனுமான மல்லகாண் பிரத்தியக்கத்திலே உனக்குக் காட்டற்குப் பிரமாணமுண்டு. மேகத்தைக் கிட்டிய மலையில் உண்டான மூங்கில் இழைந்து தானே தோற்றப்பட்ட தூமத்துக்கு நெருப்பும் புகையும் காணப்பட்ட அடுக்களையில் எரியில் வருகின்ற புகை அற்பமாதலாலே அதனை உவமமாகக் கூறல் ஒவ்வாதென்று அறிந்தும் பருவதத்திலே ஒளியுடைத்தாகிய நெருப் புண்டென்பதற் கிசைந்தாய். இசைய வேண்டுவான் ஏனே ? (விசேட சாமானியத்தினல் இசைந்ததென்று சீடன் கூறினைக அங்ஙன மாயின்) விசேடத்திலும் சாமானியத்திலும் நீ கொள்ளுமது யாது சொல்வாய் என்று வினவ கடத்தைச் செய்த செயலுக்கு உலகத் தைப் பண்ணும் செயல் பெரிதாதலால் விசேடந்தான் கொள்வ தென்று விடை கூறுவாயாயின் ஐயோ நீ பிரத்தியக்கப் பிர மாணம். கொள்ளுமதுவன்றி அனுமானங் கொண்டதில்லையாம் புகையென்னும் சாதி சாமானியத்தால் நெருப்புண்டென்று அழகி தாகக் கொள்வேன் என்பாயாகில் கடத்தைப்பண்ணுகிற செய லோடே செய்பவனையும் கண்டானொருவன் ஒருபதார்த்தம் மாட்சிமை யுடைய காரியமாகிய உருவமாயிருப்பது கண்டால் அவ்விடத்து அனுமானத்தாலே சிறிதாயிருப்பினும் பெரிதாயிருப்பினும் நிச்சய மாக ஒருவனலே குற்றமறச் செய்யப்பட்டதென்று சொல்லான் காண், என்று சொல்ல அங்ஙனமேயாயின் ஆகாய முதலாக மேலுள்ள தத்துவங்கள் அருவமாதலால் அவை தொழிற்பட்டமை எவ்வண்ணம் என்று வினவுவாயாகில் ஆகாயம் பங்கிக்கப்படுத

லானும் அது பாகமாகிய நான்கு தத்துவமும் உருவமாதற்கியை தலானும் கடம்போலே காரியமாயேயிருக்கும். மேலும் அழகிய சத்தமாகிய குணமுடைத்தாதலால் பிருதிவி தத்துவம்போ உருவமுடைத்தாம் காண். இத்தத்துவங்கள் ஆதியானபடியாலே அழியும். அழியும் பதார்த்தம் ஒருவனாலே ஆக்கப்பட்டிருத்தல் வேண்டும். உருவமாயிருத்தலால் அந்தப் பிரபஞ்சமும் பரமசிவனால் குற்றமறச் செய்யப்பட்டதே என்று கொள்வாயாக.

சமனியம் - குறுக்கல். ஆகு - பெயர்ப்பட்டது.

நு. வி: தத்துவ சமூகம் - தத்துவக்கூட்டம் பிருதிவி - நிலம்' பிரதிக்ஞை - மேற்கோள். பொருஇலி - உவமை இல்லாத. திட்டாந்தம் - எடுத்துக்காட்டு. கேவலான்னுவய அனுமானம் :- அனுமானம்- கருதல் அளவை. புகையுள்வழி நெருப்புண்டு என்று உணருதல் அனுமானமாம். அன்னுவயம் - உடன்பாட்டுச் சொல். இது மேற்கோள் ஏது எடுத்துக்காட்டு ஆகியமூன்றுடன் சேர்ந்து வந்துள்ளது. இம்மூன்றும் உறுதிப்படுத்தும் பொருளை எதிர்மறைச் சொல்லாலன்றி உடன்பாட்டுச் சொல் ஒன்றினாலேயே கூறுதலின் இது கேவலான்னுவயம் எனப்பட்டது. கடம் - குடம். பிரத்தியக்கத்தில் - காட்சியளவில். தூமத்திற்கு - புகைக்கு. பருவதம் - மலை. விசேடம் - சிறப்பறிவு. சாமானியம் - பொதுஅறிவு. பங்கிக்கப்படுதல் - கூறிடப்படுதல். பக்கமாகிய நான்கு தத்துவம் - நிலம், நீர், தீ, வளி. சாமானியம் என்பதைச் சமனியம் என்றலின் குறுக்கல் என்றார். ஆகு - ஆகுதல். தொழிற்படுதல் எனப்பொருள் படுதலின் பெயர்ப்பட்டது என்றார்.

58 பதியளவு அளவை மதியோர் வரத!
உணர்தல் வேட்கையேன் அளவையின் உணர்த்த
உணர்வோர்க்கு உணர்வது அனைவகை யாதலின்
அறிதவ அச்த்துஉலகு அறிவனை விநாஅக்
குறிவரல் போதல் கூடாது உறுதேர்
ஆதி போல அவையினிது உய்க்கும்
நீதியன் எவன்பதி ஏஎல் கோதமல்
அநேகாந் திகம்என் நினைவொடு நின்றது
கன்றுவளர் பாலினும் சென்றின்று ஈன்கோச்
சேதனம் ஆதலின் ஓதிய உயிர்போலும்

சுரபி தீம்பால் சொரியின் புரையில்
தீம்பால் வளர்த்தது அன்றென ஓம்பாது
உரையா டுநர்எவர் வரையா அறிவன்
செயல்என இரும்பை அயல்அற உய்க்கும்
காந்தம்என்று எடுத்துக் கோளும் வாய்ந்தன்று
இரண்டையும் இயைக்கும் முரண்தகு சேதனன்
இன்றெனின் அவைசென்று ஒன்ற ஆகலின்
சேதனன் செய்திஎன்று ஓதடின் உயிர்கட்கு
ஏதளவு அவையே கோதுஉக அமைக்க
நாதன் என்னை எனில்உயிர் அறியா
ஈசத் தன்மையும் இல்லை யாகில்
தம்முடைச் செயற்கும் வெம்முரண் கடம்போல்
ஒருவனை இகல்இரி துணையென மருவுவர்
என்றால் இறைமை இவர்க்குளனை இறையே
மன்றுர் மாநடம் ஆடி ஒன்றே
வீடுஅடை பவரே கூடுக செயல்எனின்
ஆதிய ரோமற் றனுதிய ரோவேறு
ஏதமில் முத்தியர் என்னின் ஆதி
அன்றெனின் சித்த சாதனம் ஆதி
என்றிடின் முத்தியது ஈவோன் முன்னர்
நின்றனன் ஆக நிகழும் இன்றி
என்றும் பந்தம் அன்றி முத்தி
ஒன்றுது உணர்வோர் உணர்விற் குன்றுது
இருந்து இரும் பாசம் செற்ற
பெருந்தகை யருளின் பொருந்தும்மற்று அஃதே.

இஃது அன்னுவயவெதிரேகி யனுமானத்தால் பதியுண்மை கூறியது.

இ - ள் ஞானவான்களுக்கு மேலான ஞானமுடையோனே! வத்து நிச்சய விசாரமுடையவர்க்கு விசாரித்தறியும் அளவைகள்

முன்பே சொல்லப்பட்ட சட்பிரமாணங்களாதலால் பதிப் பொருளி னுடைய அளவாகிய எல்லையை அந்தப் பிரமாணங்களாலே அறிவிக்க அறிய விரும்பினேன் என்று சீடன் இவ்வாறு விண்ணப்பம் செய்ய, பிரபஞ்சம் ஒரு கருத்தாவை யுடைத்தென்று மிகவும் அறிவாயாக. இது **பிரதிஞ்ஞை**. இதற்கு ஏது என் னெனில் பிரபஞ்சம் அசேதனமாயிருத்தலால் சைதன்னியனான ஒரு கருத்தாவையின்றி அவயவத்தோடு காணத்தக்க சிருட்டியும் சங்காரமும் எய்துதல் கூடாது என்று நிச்சயிக்கப் படுமாதலால் இஃது ஏது. என்போலவென்னில் மிக்க உறுதியையுடைய தேராதி வாகனம் போல இது **திட்டாந்தம்**. தேராதி தாமே பிரவர்த்திக்கமாட்டா, பிரவர்த்திப்பாரை வேண்டும் அதுபோலப் பிரபஞ்சத்தையும் பிரவர்த்திப்பானொரு கருத்தாவேண்டும். இஃது **உபநயம்**. இவ்வுலகங்களை இனிதாகச் செலுத்துகிற முறைமையை யுடையான் யாவன் அவன் பகுதியாம். இது **நிகமனம்**. இவை ஐந்தும் அன்னுவய வெதிரேகியனுமானம். அங்ஙனமேயாயின் செறிந்திருக்கின்ற அநேகவிதத்தாலே அசேதனம் பிரவிர்த்தி நிவிர்த்தியெய்தி நிற்றல் கூடுமென்பது என் நினைவில் உண்டாகா நின்றது என்று சீடன் விண்ணப்பம் செய்யக் கன்றைவளர்ப்பது பாலென நினைக்கும் செயலினும் செல்லாது காண். கன்றுஈனும் அந்தப் பசுத்தான் சைதன்னியம் ஆதலால் சொல்லப்பட்ட பிராணன் போகிய பசு இனியபாலைச் சுரந்த தாயின் குற்ற மில்லாத இனியபால் கன்றை வளர்த்தது அன்று என்று பரிகரி யாதே சொல்லுவோர் இலராவர் காண். சர்வஞ்ஞனை பரம சிவன் செய்தியைப் போல அசேதனமாகிய காந்தக்கல் இரும்பை அந்நியமற வலிக்கும் என்று நீ எடுத்துச் சொல்லும் திட்டாந் தமும் பொருளாக மாட்டாது காண் காந்தக்கல்லையும் இரும்பை யும் முகமொக்கச் சேரவைக்கும் வலிமிக்க சைதன்னியன் இல்லை யாயின் அவைதம்மிற் கூடமாட்டா ஆதலால் என்று அருளிச்செய்ய சைதன்னியனுயிருப்பான் ஒருவனலே செய்ய வேண்டும் எனில் ஆன்மாக்களில் செயல்கட்கு எல்லையில்லையாய் அவைதாமே குற்ற மறச் செய்ய அமையுமெனில் கருத்தா ஒன்று ஏனோ? என்று சீடன் விண்ணப்பம் செய்யக் கருத்தா ஒன்று ஏன் தான் என்பா யாயின் ஆன்மாக்கள் அஞ்ஞானிகள் ஆதலாலே அவ்வான்மாக் கட்குப் பதித்துவமில்லை குற்றம் நீங்கத் தம்முடைய கன்மபலம் புசித்தற்கும் பக்குவப்படுதற்கும் அசேதனமாகிய மிக்க வலிய கடம் போல உவமனில்லாத முதல்வன் என்று செய்விப்பான் ஒருவனை வேண்டி நிற்றலால் இவ்வான்மாக்கட்குக் கருத்திருத்துவம் எவ் வண்ணம் உண்டாவது? இனி, கருத்தாவைக் கேட்பாயாயின் திருச் சிற்றம்பலத்திலே மகத்தாகிய திருநடனத்தைப் புரியும் பரமசிவனே

யென்று அருளிச்செய்ய முத்தராயிருப்பாராலே பஞ்சகிருத்தியம் செய்யப்படும் என்பாயாயின் அந்த முத்தான்மாக்களுக்கு அளவில்லையே அவர் பலரல்லரோ அங்ஙனமாயின் வேறுகிய குற்றமற்ற முத்தான்மாக்கள் ஆதியாக முத்தரோ ? அன்றியே அநாதியாக முத்தரோ ? என்று வினவுமிடத்து அநாதி முத்தன் செயல் என்னில் அவ்வார்த்தை என்பக்கம் என்று அறிக. ஒருநாளிலே முத்தி பெற்றோராலே செய்யப்படும் எனில் அவர்கட்கு முன்பே முத்தியைப் பிரசாதித்தா னொருவன் உளனாக வேண்டும் இப்படியொரு கருத்தாவையின்றி என்றும் பந்தாய்க் கிடக்குமஃதன்றி முத்தி அடைவதும் இல்லையாம் ஆகையால், இனிப் பதியுண்மையுணர்ந்து தியானிப்போர் உணர்வின்கண் ஒளியாமலே அமர்ந்து பெரிய பாசச்சேதம் பண்ணுதற்குரிய பெருந்தகையாகிய பரம சிவனுடைய பிரசாதத்தாலே அந்த முத்தி கூடும் எ - று.

மற்று, வினைமாற்று, ஓகாரம், எதிர்மறை, ஏ, அசை.

நு. வி : அன்னுவயம் - உடன்பாட்டுச் சொல். வெதிரேகி - எதிர்மறைச்சொல். வத்துநிச்சய விசாரம் உடையார்க்கு - பொருள் உண்மை தெரிதல் வேண்டும் என்னும் ஆராய்ச்சி உடையார்க்கு. சட்பிரமாணங்கள் - காண்டல், கருதல், உரை, இன்மை, பொருட்பேறு, உவமை என்ற ஆறு பிரமாணங்கள். அசேதனம் - அறிவற்றது. தேராதி - தேர் முதலியன. பிரவர்த்திக்கமாட்டா - தோற்றம் பெற மாட்டா. உபாயம் - ஏற்றல். பிரவர்த்தி நிவர்த்தி எய்தி நிற்றல் - தோற்றமும் அழிவும் எய்தி நிற்றல். சர்வஞ்ஞன் - முற்றும் உணர்ந்தோன். பதித்துவம் - இறைமைத் தன்மை. கருத்திருத்துவம் - கருத்தாவாகிற தலைமைத் தன்மை. பஞ்சகிருத்தியம் - படைத்தல் முதலிய ஐந்தொழில்கள். அநாதி முத்தன் - இயல்பாகவே பாசங்களில் நீங்கியவன். எனது பக்கம் - என் முடிவு. பிரசாதம் - கருணை.

59 எல்லாத் தொழிலும் இறைவற் குறித்த
இல்லாச் சேதனம் ஆகி எங்கணும்
நின்றுழி நில்லாத் தகைத்தால் நின்றுழி
நிற்கப் படுவது யாதே அஃதே
முற்பட அமைந்தது முயற்சியும் இன்றே.

இது கேவல வெதிரேகி யனுமானத்தாற் பதியுண்மை கூறியது.

இ - ள் சருவ காரியங்களும் ஒரு கருத்தாவைக் காட்டாநின்றன இது பிரதிஞ்ஞை. இதற்கு ஏது என்னெனில் அசேதனமாய் எவ்விடத்தும் ஒரு படித்தாயில்லாத தன்மையால் இஃதுஏது இவை இரண்டும் கேவலான்னுவயம். இனிக்கேவல வெதிரேகிவநமாறு .- நின்றவிடத்தே ஒருபடித்தாய் நிற்க அமைந்தது யாதொன்று? அஃது அனாதியாயுள்ளது ஒருவராற் செய்யப்பட்டதும் அன்று காண் எ - று.

ஏ, அசை. இல்லாச் சேதனம் என்றது அசேதனம் என்றபடி.

நு. வி : வெதிரேகி அனுமானம் - எதிர்மறைப் படவரும் கருதல் அளவை. இவ்வுலகம் அறிவற்றதாயும் ஒரு தன்மைத்தாய் இன்றியும் இருத்தலின், அதனை இயக்க ஒரு முதல்வன் வேண்டும். அம்முதல்வனே அனாதியாயும், அறிவுடையவனாயும் எஞ்ஞான்றும் ஒரு தன்மையனாயு மிருத்தலின் அவனுக்கு ஒரு தலைவன் வேண்டுவதில்லை என்பது இதன் கருத்தாகும்.

பதி சங்கற்பம்

60 விந்து அவத்தை விசேடத்து எந்தை
கவவுசிவ பேதம் தவஅளித் தனைஅது
சேதனம் அன்மையின் கோதறச் செயல்இன்று
அச்செயற்கு அமலன் என்னின் மற்றவற்கு
எய்திடும் விகாரம் எய்த மைஉகாஅ
விகாஅ ரத்தைத் தவிரத் தவிராது
என்னை என்னின் பன்னுவ மன்னே
பொங்கிய வினைஇரு வகைத்துச் சங்கற்
பத்தொடு கரணத்து அலர்கடம் குலாலன்
ஏற்படு சங்கற் பத்தின் முற்பட
இயற்றலன் இறைவன் சங்கற் பத்தின்

மயக்கற விந்துவைத் துயக்கறக் கலக்கல்
செய்வன் ஓவான் செய்தற்கு ஐய
காரணம் ஆகம் எவையும் சேர்தல்
செல்லான் ஆக லானும் நல்லியல்
அமலன் ஆக லானும் விமலம
தாக அம்ம ஆகம் மேவுநர்
போகலர் யாவும் தீதுக இயற்றல்
இல்லோர் ஆகம் இயற்ற வல்லோர்
அல்லோர் என்னல் ஆகம் எல்லாம்
செய்தியைத் தடுத்தற்கு ஐயம் இன்றுஅஃது
இன்றேல் எவையும் இயற்றற்கு ஒன்றும்
குன்றுது எவன்எனில் மன்ற தன்தனு
ஆக இயற்றிய வறிவன் போகிய
தேகன் அல்லகொல் சிவன்அகி லத்தைச்
செய்வன் இன்னும் ஐய கேண்மோ
மெய்யுடன் இயைவோர்க்கு அல்லதை வினைமற்று
உய்யாது என்னில் உடல்கா ரியம்அக்
காரியம் செய்வோன் இன்றி வாராது
அவனுடன் முதலிற் சிவனும் மற்றவன்
ஆக அனவத்தைத் திறனல் லதைப்
போகா தாகலின் புகல்முதல் தொடக்கிற்கு.
எல்லா ஆகமும் இரித்துஇணை இறந்த
செல்லா நல்வலி சிறந்த வல்லோன்
ஈச ஞக வியையும்
ஆசின்று ஆயுநர் ஆயுங் காலே.

இஃது அனுமானப் பிரமாணத்தால் "பூபூதராதி" என்னும் திருவகவல் முதல் பிரபஞ்ச சிருட்டிகொண்டு பதியுண்மை கூற இவன் சிருட்டிக்கிறபடி எங்ஙனே? என்று சீடன் வினவப் பிக்க அவன் நிட்களனுய் இருந்தே சிருட்டிப்பான் என்று கூறியது.

ஆயுள் சந்தா செலுத்தினுல்

ஓர் அன்பளிப்பு

ஸ்ரீ குமரகுருபரர் திங்களிதழுக்கு
ரூ. 125 ஆயுட் சந்தா செலுத்தினுல்
ரூ. 55 மதிப்புள்ள

கந்தர் கலிவெண்பா

இசைத்தட்டு ஒன்று அன்பளிப்பாக
அளிக்கப்பெறும்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய
அரிய பாராயண நூலாகிய கந்தர் கலிவெண்பா
பிரபல இசையறிஞர் சேலம்
டாக்டர் ஜெயலட்சுமி அவர்களின்
இனிய குரலிசையுடன் L. P இசைத்தட்டாக
வெளியிடப்பெற்றுள்ளது.

ஆயுள் சந்தா ரூ. 125 அனுப்புவோருக்கு இந்த இசைத்
தட்டு ஒன்று அன்பளிப்பாக அளிக்கப்பெறும்.
அஞ்சல் செலவு ரூ. 9—00.

முன்னமேயே ஆயுட்சந்தா செலுத்தியவர்கள் ரூ 25-ம்
அனுப்புகைச் செலவும் பணவிடை மூலம் அனுப்பி
இசைத்தட்டைப் பெறலாம்.

'ஸ்ரீ குமரகுருபரர்'
பதிவு எண். T. N. / KMB / 12.

ஸ்ரீ குமரகுருபரர்

சமய இலக்கியத் திங்கள் இதழ்

சந்தா விபரம்

ஆயுள் சந்தா	(உள்நாடு)	ரு 125-00
,,	(வெளிநாடு)	ரு 225-00
ஆண்டுச்சந்தா	(உள்நாடு)	ரு 10-00
,,	(ஸ்ரீலங்கா)	ரு. 13-00
,,	(வெளிநாடு)	ரு. 15-00

M. O. அனுப்ப வேண்டிய முகவரி:
நிர்வாக ஆசிரியர். "ஸ்ரீகுமரகுருபரர்"
ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள். 612 504.

வெளியிடுபவரும் ஆசிரியரும்: ம. வே. பசுபதி
அச்சிடுபவர் தா. ம. வெள்ளைவாரணம்.
ஸ்ரீகுமரகுருபரர் அச்சகம், ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.

Posted at sub-Post Office at Tirupanandal
612504
Licence No. 01. Licensed to Post without Prepayment.

திரு.

ஏ. 67
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
பெஸண்ட் நகர்,
சென்னை — 600 090.